பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 19 சனிக்கிழமை (05.12.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 009

# 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாலேயே அதிகாரப் பகிர்வு அமைய வேண்டும்

## இந்திய ராஜ்ய சபையில் மீண்டும் வலியுறுத்து



கொழும்பு, டிசெம்பர் 5

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று அர்த்தபூர்வமான அதிகாரப்பகிர்வு யோசனையை முன்வைக்குமாறு இந்தியா இலங்கையை வலியுறுத்திக் கேட்டுள்ளது.

சிறுபான்மை இன மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இந்தியா மீண்டும் வலியுறுத்தி உள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

உள்ளே

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான ஆங்கிலம் I, II, பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

## ரணில் விக்கிரமசிங்கா யாழ்ப்பாணத்துக்கு 12 ஆம் திகதி வருகிறார்

கொழும்பு, டிசெ.5

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து சிவில் சமூகப் பிரதிநிதிகள், சமயத் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் போன்ற பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடவிருக்கின்றார். (20ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களுக்கு சுயநிர்ணயத்துடன் கூடிய நிரந்தர அரசியல் தீர்வு வழங்க வேண்டும்

## அதன் மூலமே ஜனநாயகம் மலரும் என்கிறார் விக்கிரமபாகு

கொழும்பு, டிசெ.5

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதில் எமக்கும் உடன்பாடு உண்டு. ஆனால், அதன் மூலம் மாத்திரம் ஜனநாயகம் மலரப்போவதில்லை.

மாறாக தமிழ் மக்களுக்கு சுயநிர்ணயத்துடன் கூடிய நிரந்தர அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும். அதன் மூலமே அனைத்து மக்களும் ஐக்கியத்துடன் வாழும் ஜனநாயகம் மலரும்.

இடதுசாரி முன்னணியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின்போது விக்கிரமபாகு கருணாரட்ன இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் மேலும் அவர் கூறியவை வருமாறு:-



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜெனரல் சரத் பொன் சேகாவிற்கும், மஹிந்த ராஜபக்ஷவிற்கும் தமிழ் மக்கள் மீது திடீர் அக்

(20ஆம் பக்கம் பார்க்க)

## நாடு திரும்பினார் பொன்சேகா

கொழும்பு, டிசெ.5

இந்தியாவிற்கு ஒருநாள் விஜயத்தை மேற்கொண்டிருந்த முன்னாள் இராணுவத் தளபதியும், எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளருமான சரத் பொன்சேகா நேற்று நாடு திரும்பியுள்ளார்.

இலங்கை அரசியல் வட்டாரங்களில்

(20ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் படம் அகற்றப்பட்டது: களுத்துறையில் வியாழனன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, டிசெ.5

களுத்துறை நகரில் அமைக்கப்பட்டிருந்த ஜெனரல் சரத் பொன்சேகாவின் புகைப்படம் கடந்த 29ஆம் திகதி இனந்தெரியாத சிலரால் அகற்றப்பட்டமைக்கு எதிராக களுத்துறை நகரில் நேற்றுமுன் தினம் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

சரத் பொன்சேகாவின் புகைப்படத்தை ஏந்திய ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் விஜேமான, மாகாண சபை உறுப்பினர் பி.டி.அபேரத்ன தலைமையில் களுத்துறை நகரில் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன், பொன்சேகாவின் படத்தைத்

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸிக்குச் சென்ற 50 ஆவது அகதிகள் படகு இடைமறிப்பு

கொழும்பு, டிசெ.5

அகதிகளை சட்ட விரோதமான முறையில் ஆஸிக்கு ஏற்றிச்சென்ற 50 ஆவது படகு அவுஸ்திரேலிய கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் இடைமறிக்கப்பட்டது.

இப்படகில் இலங்கையர்கள் உட்பட 53 பேர் வந்திருக்கிறார்கள் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

அவுஸ்திரேலியாவின் சுங்கப் பகுதிக் கப்பலான 'ஓசியானிக் வைக்கிங்' இப்படகை இடைமறித்து தடுத்து நிறுத்தி உள்ளது. பயணிகள் 53 பேர் மட்டுமல்லாது நான்கு மாலுமிகளும் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இச்சட்டவிரோத பயணிகள் கிறிஸ்மஸ் தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

## ரொபேர்ட் ஓ பிளேக் இலங்கை வருகிறார்

கொழும்பு, டிசெ.5

அமெரிக்காவின் தென்னாசிய மற்றும் மத்திய ஆசியாவிற்கான உதவி வெளிவிவகார அமைச்சர் ரொபேர்ட் ஓ பிளேக் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

உதவி வெளிவிவகார அமைச்சராக

(20ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச மனித உரிமை தின விழா வியாழன்று வீரசிங்கம் மண்டபத்தில்

### தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.5

மனித உரிமைகள் இல்லத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வுகள் நடைபெற உள்ளன. அவற்றில் கலந்துகொள்ளுமாறு தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

எதிர்வரும் வியாழக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மனித உரிமைகள் தினப் பொதுக்கூட்டமும், அதனைத் தொடர்ந்து ஊர்வலமும் நடைபெறவுள்ளன.

இதில் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும்

(20ஆம் பக்கம் பார்க்க)

## சோமாலியக் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட இலங்கையர் விடுதலை

கொழும்பு, டிசெ5

சோமாலியக் கடற்கொள்ளையர்களால் கடத்திச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

'எம்.வி. சாரி' எனப்படும் கப்பலில் கடமையாற்றிய இலங்கையர்கள் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் சோமாலியக் கடற்கொள்ளையர்களால் கடத்திச் செல்லப்பட்டனர். (20ஆம் பக்கம் பார்க்க)

Cosy Hotel & Restaurant
Open 06.00am to 11.00pm
>AC/Non AC Rooms (with all Facilities)
> Conference/ Party Hall (75 Persons)
> Special Function Menus (buffet style)
கொசி உணவகம்
Feel like home
Introducing Special North Indian Break fast 06.00am to 10.00am
யாழ் நகரிலும் கொழும்பிலும் சுவையான, தரமான
Indian, Chinese, Jaffna Foods
இல: 25, புகையிரத நிலைய வீதி, வெள்ளவத்தை. HOTLINE: 0112504020
இல:15, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம். HOTLINE: 021-2225899

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# முழுத்தமிழர்களினதும் நலன்களைக் கருதியே கூட்டமைப்பின் முடிவு அமைவது திண்ணம்

## ஜனாதிபதித் தேர்தல் குறித்து ஸ்ரீகாந்தா திட்டவட்டம்

கொழும்பு, டிசெ.05

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முழு இலங்கைத் தீவிலும் வாழும் தமிழ் மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவு அமைவது திண்ணம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்பது தொடர்பாக விளக்கமளிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னால் சில தெரிவுகள் உள்ளன. அதே நேரத்தில் கூட்டமைப்பு என்ன முடிவு எடுக்க வேண்டும் என்பது பற்றிப் பலரும் எமக்கு அறிவுரை கூறத்தலைப்பட்டுவிட்டனர்.

சுயமாகச் சிந்தித்து முடிவு எடுக்கும் திறனை கூட்டமைப்பு இழந்துவிட வில்லை; இழக்கவும் மாட்டாது.

கூட்டமைப்பு எந்தவோர் அரசியல் அணிக்குள்ளும் சிக்கிக் கொண்டிருக்கவில்லை. எமது கைகள் கட்டிப்பிணைக்கப்பட்டிருக்கவில்லை. அவசரப்படாமல் சுயமாகச் சிந்தித்து நிதானமாக விவாதித்து நாம் முடிவு செய்வோம்.

இந்த விவகாரத்தில் எமது அணுகுமுறை தென்னிலங்கை வாழ் தமிழ் மக்கள் வேறு, வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் வேறு என்ற தவறான அடிப்படையில் அமைய முடியாது.

ஒட்டுமொத்தமாக முழு இலங்கைத் தீவிலும் வாழும் தமிழ் மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டே நாம் திடமான தொரு முடிவை எடுப்போம் - என்றார். (ஒ-1)

## யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் பரிசளிப்பு நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், டிசெ.05

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

கல்லூரி அதிபர் வி.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா கலந்து கொள்வார். திருமதி கமலாதேவி இராசையா பரிசில்களை வழங்குவார். (ஒ-1)

## காணாமற் போன நால்வரும் இரகசியப் பொலிஸாரால் கைது!

கொழும்பில் கடந்த புதன்கிழமை இரவு காணாமற்போன பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட நால்வரும் குற்றச்செயல் களுடன் தொடர்புபட்டவர்கள் என்ற அடிப்படையில் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு சி.ஐ.டி.யினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவைச்சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர், அவரது நண்பரான வர்த்தகர் உட்பட்ட நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் நால்வரும் காணாமல் போயினர் என்று நேற்று முன்தினம் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இக்குழுவினர் நீண்ட காலமாக குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்ற தகவல் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்ததைத் தொடர்ந்தே வியாழக்கிழமை அதிகாலை பொரளை மயானத்திற்குப் பின்னால் உள்ள கித்துல்வத்த வீதியில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது இவர்கள் மேலதிக விசாரணைக்காக குற்ற விசாரணைப் பிரிவினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (சி)


### தவறிவிட்டது

மயில்வாகனம் நளினி என்பவருடைய தே.அ.அ (இல - 795052933V), விசேட அ.அட்டை(0902001717) அத்துடன் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பை நல்லூர்க் கோயிலுக்கும் இந்து மகளிர் கல்லூரிக்கும் இடையில் தவறிவிட்டது.கண்டெடுத்தவர்கள் சிவானந்தா கபே 648, பருத்தித்துறை வீதி, நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.சன்மானம் வழங்கப்படும்.

T.P: 0217210692

### வீடு விற்பனைக்கு

மானிப்பாய் மெமோறியல் வீதியில் 4 ¼ பரப்புக்காணியில் அமைந்துள்ள புது வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0717353524

### விற்பனைக்கு

தளபாடங்கள், மின்உபகரணங்கள் மற்றும் கொமினிகேசன் சாதனங்கள் விற்பனைக்குண்டு.

சுந்தர்மடம் 0777079531


உ
சிவமயம்

### அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயம்
### பெரிய நாவலடி - கொடிகாமம்



மேற்படி ஆலயத்தின் மணவாழக்கோல உற்சவம் இம்மாதம் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் விமரிசையாக நடக்க அம்பாள் அருள் கைகூடியுள்ளது. அன்று காலை 8 மணி முதல் கிரியைகள் யாவும் ஆரம்பமாக உள்ளன.

சங்காபிஷேக கிரியைகள் நடைபெற்று அபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பூசைகள் நடைபெற்று அம்பாளின் வீதி உலாவும் நடைபெறும்.

அதன்பின் விசேட இசை நிகழ்ச்சிகள் நடைபெற்று தொடர்ந்து அன்னதான நிகழ்வுகளும் நடைபெறும்.

பக்தர்கள் யாவரும் கலந்து சிறப்பித்து அம்பாளின் அருளினைப் பெற்றுய்வீர்களாக.

(92818) ஆலய தர்மகர்த்தா

### கண்ணீர் அஞ்சலி



பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி
வைத்திய கலாநிதி Dr.v.ஜெயராஜா
அவர்களது அன்பு மகள்

**சாயினியின்**

பிரிவுச் செய்தி அறிந்து ஆறொணா துயருறுகின்றோம். எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கவலையையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்,
ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை.

### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

*அன்புடையீர்!*

*05.11.2009* அன்று சிவபதமடைந்த எமது குலவிளக்கு

**சின்னத்தம்பி செல்வராசா**
(ஓய்வுபெற்ற மின் இணைப்பாளர்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (05.12.2009) சனிக்கிழமை காலை 8 மணியளவில் திருநாவலூர் தெணியம்மன் அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும். மேற்படி கிரியைகளிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆத்தியடி ஒழுங்கை,
VM,ரோட், பருத்தித்துறை. (சி/562944) குடும்பத்தினர்.


### வாடகைக்கு

(Ac/NOAC) அறைகள், நாள், கிழமை, மாத வாடகைக்கு சகல வசதிகளுடனும் உண்டு.

(92843) அஞ்சல் IN

T.P: 0114878686 27, ஸ்ரேசன் றோட், வெள்ளவத்தை.

### இறைச்சிக்கோழி விற்பனை

புறொய்லர், கல்பேட்ஸ், முட்டை என்பன மலிவான விலையில் எந்த நேரமும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: மல்ரிப்பாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி, நாச்சிமார் கோவிலடி.

### கார்கள் விற்பனைக்கு

Suzuki (IGNIS Japan) Suzuki Maruti 800 Ac

சனிக்கிழமை மதியத்தின் பின்னரும் ஞாயிற்றுக்கிழமையும் பார்வையிடலாம்.

46,சோமசுந்தரம் அவனியு,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

TELESONIC | SUNDA | FIVE STAR | RICH STAR | MID SUMMER



| | | |
|---|---|---|
| Table Fans | Mixer Grinder | DVD, TV |
| Stand Fan's | Gas Cookers | Blender's |
| Ceiling Fan's | Ceramic Ware | LED Torches |
| Wall Fan's | Enamelware | Iron's, |
| Exuast Fan's | Rice Cookers | Airports Toasters |
| Orbit Fan's | Oven's | Pressure Lantern |

(And MIMI Brand Vacuum Flasks 8 Models)
.......many more items......

Reasonable & Affordable Price | For wholesale & Retail

IZZY ENTERPRISE (PVT) LTD
155/7, Prince Street, Colombo 11. Tel : 0777814117 Fax: 2437843

FORESIGHT ADs


## மரண அறிவித்தல்கள்

### யோசப் சூசைப்பிள்ளை
(ரெட்ணசிங்கம் - சாரதி)



யாழ்ப்பாணம், இரண்டாம் குறுக்கு வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட யோசப் சூசைப்பிள்ளை (ரெட்ணசிங்கம்) நேற்று (04.12.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசப் - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், ரஞ்சினியின் அன்புக் கணவரும், மொறிஸ், போல், அமலன், ரஞ்சித், ரெட்ணா, ஜஸ்மின், ஜக்சானி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலசிங்கம், சிறப்பின், பிளோமினா, அல்பேட் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான செல்லமணி, தனசிங்கம் ஆகியோரின் சகோதரரும், அரசு, சந்திரன், மகேந்திரன், காலஞ்சென்றவர்களான மனோகரன், லூத்தம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.12.2009) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின், யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.209, இரண்டாம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.* (92872) தகவல் குடும்பத்தினர்.

### திருமதி இராசரத்தினம் பொன்னம்மா



வாதரவத்தை, புத்தூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் பொன்னம்மா நேற்று (04.12.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை -அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், அமரர் செல்லத்துரை இராசரத்தினத்தின் அன்புத் துணைவியாரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர்களான தம்பையா, பாக்கியம், மகாலிங்கம், சின்னத்துரை (கிராமசேவை நிர்வாக உத்தியோகத்தர்), ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வராணி, தெய்வேந்திரம் (சிவகணேசன் ஒப்பந்ததாரர், வீதி அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு) பு[illegible]ராணி, கமலேந்திரம் (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனியா) கமலரா[illegible], புவனேந்திரம் (மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை), நவநீதராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருஷ்ணானந்தம், சுலோசனாதேவி, இரத்தினசிங்கம், இராசலட்சுமி, கணேசலிங்கம், இராசகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், விஜயேஸ்வரன் (உள்ளகக் கணக்காய்வாளர், பிராந்திய ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), ஆனந்தாஸ்வரன் (விவசாயத் திணைக்களம் , முல்லைத்தீவு), மதனீஸ்வரன் (ஆசிரியர், பாலைப்பாணி தமிழ் வித்தியாலயம்), விஜிதா, வினோதா, சுஜிதா (பிரதேச செயலாளர் அலுவலகம், பாண்டியன்குளம்), பிருந்தா கோகிலன் (ஆசிரியர், விக்கினேஸ்வரா வித்தியாலயம், வாதரவத்தை), பிரபாலினி, நிரோகுலன், அஜிதா, சுரேகுலன், அருணாளினி, ஐங்கரன், அனுசாயினி, அனோஜினி, அச்சுதகரன், மதுரா, விசாகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டினோசன், தர்மிகா, தர்சிகா, சுபானுகன், சுபானிகா, ஜனுசன், விஷ்ணுகா, பவிசன், அபிரன், துவாசிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும், சிவக்கொழுந்து, கந்தசாமி, மனோன்மணி, கமலாம்பிகை, அமரர் தவமணி, சின்னத்தங்கம், கந்தசாமி, அமரர்களான கிருஷ்ணப்பிள்ளை, அற்புதமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.12.2009) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வாதரவத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(92871) தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், இ. தெய்வேந்திரம் (மகன்)
*வாதரவத்தை, புத்தூர்.*

### கார்த்திகேசு சாயுச்சியநாதன்
(இளைப்பாறிய பிரதம எழுதுநர், கச்சேரி, யாழ்ப்பாணம்.
முன்னாள் எழுதுநர், ஆளுநர் உப அலுவலகம், கொழும்பு)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும், சிவலிங்கப் புளியடியை வாழ்விடமாகவும், தற்போது வெள்ளவத்தையில் வசித்தவருமாகிய கார்த்திகேசு சாயுச்சியநாதன் நேற்று (04.12.2009) வெள்ளிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு- மனோன்மணி இலட்சுமி தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற கந்தையா - சின்னத்தங்கம் தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், கிருபாகரன் (லண்டன்), பாமினி (பொறியியலாளர்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாயுச்சியம்பாள், சந்திரகாந்தா, காலஞ்சென்ற சந்திரபாலன் மற்றும் தயாபரி, சரோஜினி (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), காலஞ்சென்ற கந்தையாப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சிவபாக்கியம், மற்றும் Dr.பாலசிங்கம், நடராசா, செல்வநாயகி, கமலம், காலஞ்சென்ற வன்னியசிங்கம் மற்றும் வீரசிங்கம், பூபதி, காலஞ்சென்றவர்களான குற்றாலலிங்கம், கதிரேசு, மற்றும் தேவகி, அமிர்தலிங்கம், சுந்தரலிங்கம், ஜீவவதனி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (06.12.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் கிரியைகள் நடைபெற்று 11 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பொறளை கனத்தை இந்து மயானத்திற்கு கொண்டு செல்லப்பட்டு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**19 1/3 Station Court, Station Road,**
**Wellawatta.**
**T.P: 0112 586340** தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அரசமைப்பின் 13 ஆவது திருத்தமும் அதற்கு அப்பால் செல்லுதலும்!

இலங்கை அரசமைப்புக்குச் செய்யப்பட்டுள்ள பதின்மூன்றாவது திருத்தத்துக்கும் அப்பால் செல்லும் - அர்த்தமுள்ள - அதிகாரப் பரவலாக்கல் திட்டம் ஒன்றை முன்வைக்குமாறு இலங்கை அரசை இந்தியா தொடர்ந்து வலியுறுத்துமாம்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, 'வடக்கு இலங்கையின் அண்மைக்கால விருத்திகள்' என்ற தலைப்பில் தாம் வெளியிட்ட அறிக்கையிலேயே இப்படிக் கூறியிருக்கின்றார்.

வட்டுக்கோட்டைத் தீர்மானம், திம்புக் கோட்பாடுகள், ஒஸ்லோ கூட்டு அறிவிப்பு என்ற நிலைப்பாடுகள் எல்லாவற்றையும் கைவிட்டு கடைசியாக அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் அவல நிலைக்கு இந்த விடயம் சென்றிருக்கின்றமை தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களுக்குப் பெரும் துரதிஷ்டம் அன்றி வேறில்லை.

அரசமைப்பின் 13 ஆம் திருத்தம் என்பது இப்பத்தியில் நாம் ஏற்கனவே தெளிவாகவும், வெளிப்படையாகவும் சுட்டிக்காட்டியபடி இலங்கையின் உயர் சட்டமான அரசமைப்பிற்கு சட்ட ரீதியாக - உரிய முறைப்படி - கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்ட சட்ட ஒழுங்கு விதிகளாகும். இருபத்தியொரு ஆண்டுகளுக்கு முன்னர் சட்டமாக்கப்பட்டும் - சிறுபான்மையினரான தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிரும் ஏற்பாடு என்ற காரணத்தால் - இதுவரை காலமாக அரச நிர்வாகங்களால் மதிக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டு - நடைமுறைப்படுத்தப்படாமல் ஒதுக்கப்பட்டு - கிடக்கும் சட்ட ஒழுங்கு விதிகளே இவை.

இதில், மிகப் பெரிய வேடிக்கை என்னவென்றால் இந்திய அரசின் - புதுடில்லியின் - ஒருதலைப்பட்சமான தலையீட்டின் மூலம் அல்லது நேரடி அழுத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்த வாசகங்களுக்கு சட்ட அந்தஸ்துக் கொடுக்கும் இலக்குடன் கொண்டுவரப்பட்டதே அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் என்பதுதான்.

இந்தியாவின் தலையீட்டினால், இந்திய விருப்பை நிறைவு செய்யும் இலக்குக்காக, இலங்கைத் தீவில் கொண்டு வரப்பட்ட அரசமைப்புத் திருத்த ஏற்பாடு, கடந்த இருபத்தியொரு ஆண்டுகள் கடந்தும் இன்னும் நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பது இந்தியாவுக்குத்தான் பெரும் வெட்கக்கேடானது.

எனினும், அந்தப் பதின்மூன்றாவது திருத்தம் கூட சிறுபான்மையினரான தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளைத் தீர்க்கவில்லை, அதனைத் தாண்டிச் செல்லும் வகையில் கூடிய அதிகாரப் பரவலாக்கலுடன் கூடிய - அர்த்தபுஷ்டியான - புதிய திட்டம் முன்வைக்கப்பட வேண்டும் என்று கொழும்பை புதுடில்லி வற்புறுத்துகின்றமை இன்றைய நிலையில் முக்கிய அம்சமாகும்.

இதில் இரண்டு விடயங்கள் பொதிந்துள்ளமை கவனிக்கத்தக்கது.

ஒன்று - தனது ஏற்பாட்டில் கொண்டுவரப்பட்ட அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் இன்றைய நிலையில் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்வதற்குப் போதுமானதல்ல என்பதை இந்தியா இப்போதாவது ஒப்புக் கொள்ளும் நிலைமை உள்ளது.

அடுத்தது - அந்தப் பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அப்பால் செல்வதன் மூலமே இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்பட முடியும் என இந்தியா கருதுவது.

இப்போது, 'பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அப்பால் செல்வது' குறித்துப் பல தரப்பிலும் பேசப்படுகின்றது. ஆனால் அதில் குதர்க்கமும் சில சமயங்களில் அடங்கியிருப்பதுதான் வேதனைக்குரியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனை அண்மையில் சந்தித்த இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூட அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்துக்கும் அப்பால் செல்வது குறித்துப் பிரஸ்தாபித்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

அதேசமயம், எதிர்க்கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளராக நிறுத்தப்படவிருக்கும் சரத் பொன்சேகாவும் கூடத் தமது முதலாவது செய்தியாளர் மாநாட்டில் அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அப்பால் செல்வது குறித்துக் குறிப்பிட்டிருக்கின்றார்.

'13 ஆவது திருத்தத்துக்கு அப்பால்' அல்லது '13 ஆவது திருத்தம் பிளஸ், பிளஸ்' என்றெல்லாம் பூசிமெழுகப்படும் இந்த வார்த்தை ஜாலங்களில் பெரும் மாயக்கட்டு இருப்பதுதான் முக்கியமான விடயமாகும்.

பதின்மூன்றாவது திருத்தத்தின்படி மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் எல்லாம் உள்ளன. அந்த அதிகாரப் பகிர்வுத் திட்டத்தின் முக்கியமான - அடிப்படையான - அம்சமே இந்த இரண்டும்தான்.

ஆனால், இந்த இரண்டு அதிகாரங்களையும் மாகாணங்களுக்குப் பகிரவேண்டும் என இலங்கையின் அரசமைப்பு, அதற்குச் செய்யப்பட்ட 13 ஆவது திருத்தத்தின் மூலம் வலியுறுத்துகின்றபோதும், அதைச் செய்யமுடியாது என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தருக்குத் தெளிவாகக் கூறிவிட்டார் என்று தெரிகிறது.

இப்படி பதின்மூன்றாவது திருத்தத்தின் அடிப்படை அம்சங்களையே - பிரதான விடயங்களையே-நடை முறைப்படுத்த மறுத்துவிட்டு அதையே, '13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்லுதல்' என்றும், '13 ஆவது திருத்தம் பிளஸ்,பிளஸ்' என்றும் கதை விடுகிறார்கள் அரசியல் தலைவர்கள்.

'பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அப்பால்' என்ற வாசகத்தை உச்சரிக்கும் தென்னிலங்கைத் தலைவர்கள் முதலில் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது பற்றிய தங்கள் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்திய பின்னர், அதற்கு அப்பால் செல்வது பற்றிப் பிரஸ்தாபிப்பதே பொருத்தமானது; சரியானது!

# புலிகளிடம் கைப்பற்றிய சொத்தை தன்வசப்படுத்த முயல்கிறாராம் மஹிந்த

## விவரங்களை வெளியிடக் கோருகிறார் ரணில்

கொழும்பு, டிசெ. 05

புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட நிதி மற்றும் சொத்துகள் போன்றவற்றின் விவரங்களை இந்த மாதம் எட்டாம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க நேற்றுமுன்தினம் அரசிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இச்சொத்துகளையும், கே.பியின் சொத்துகளையும் மஹிந்த ராஜபக்ஷ தன்வசப்படுத்தி அவற்றை தேர்தல் பிரசாரப் பணிகளுக்குப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளார் என்றும் அவர் சொன்னார்.

சிலாபத்தில் நேற்றுமுன்தினம் ஐ.தே.கவின் காரியாலயத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே ரணில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஊழல், மோசடிமிக்க மஹிந்த ராஜபக்ஷவின் அரசு இப்போது ஆட்டங்காணத் தொடங்கிவிட்டது. இந்நாட்டின் முன்னேற்றம் மீது அக்கறை கொண்டு நாம் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக நிறுத்தியுள்ளோம். இதன்மூலம் மஹிந்தவின் ஆட்சி நிச்சயம் இல்லாதொழிக்கப்படும்.



இத்தேர்தலில் எப்படியாவது வென்று விட வேண்டும் என்பதற்காக அரசு பெரும் மோசடியில் ஈடுபடலாம். யுத்தத்தின்போது புலிகளிடமிருந்து கைப்பற்றிய நிதி மற்றும் சொத்துகளை தன்வசப்படுத்த மஹிந்த திட்டமிட்டுள்ளார்.

கே.பியின் சொத்துகளைக்கூட தன்வசப்படுத்த மஹிந்த குடும்பம் திட்டமிட்டுள்ளது. இச்சொத்துகளை அரசு தேர்தலுக்காகப் பயன்படுத்தும். அவை மக்களின் சொத்துகள். பாதிக்கப்பட்ட மக்களுக்காக இச்சொத்துகள் பயன்படுத்தப்படவேண்டும்.

இச்சொத்துகளின் விவரங்களை அரசு இம்மாதம் எட்டாம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும். அவற்றை மஹிந்த தன்வசப்படுத்துவதற்கு நாம் அனுமதிக்கமாட்டோம். 2003 இல் புலிகளுக்குப் பணம் கொடுத்து ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற மஹிந்த இம்முறைத் தேர்தலில் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துகளைப் பயன்படுத்தி வெற்றிபெற முற்படுகிறார் - என்றார். (சி)

# 2009 ஆம் ஆண்டின் இலங்கையராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவு



உலகப் பிரசித்தி பெற்ற சஞ்சிகைகளில் ஒன்றான எல்.எம்.எல் வர்த்தக சஞ்சிகை 2009ஆம் ஆண்டின் இலங்கையராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைத் தெரிவு செய்துள்ளது.

நாட்டில் 30 வருட காலமாக நிலவிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வழங்கிய தலைமைத்துவத்தை இந்தச் சஞ்சிகை பாராட்டியுள்ளது.

எவ்விதமான அழுத்தங்களுக்கும் வளைந்து கொடுக்காமல் எவராலும் மேற்கொள்ள முடியாத இந்த நடவடிக்கையை துணிச்சலுடன் மேற்கொண்டு பயங்கர யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததைப் பாராட்டியே சஞ்சிகை இந்த விருதை வழங்கத் தெரிவுசெய்துள்ளது. (50)

# யாழ். நகரின் முக்கிய பகுதிகளில் போக்குவரத்து சமிக்ஞை விளக்குகள்

## விரைவில் நிறுவப்படுமென்கிறார் முதல்வர்

நல்லூர்,டிசெ.5

யாழ்.நகரின் முக்கிய பகுதிகளில் வீதிப் போக்குவரத்து வசதிகளுக்கமைய சமிஞ்ஞை விளக்குகள் நிறுவப்படவுள்ளதாக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

யாழ்.நகரின் முக்கிய அபிவிருத்தி நடவடிக்கைகள் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை உலகளாவிய அபிவிருத்தி மையத்தின் முழுமையான நிதியுதவியின்கீழ் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் மாநகர முதல்வர் கூறினார்.

இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளில் மாநகரசபை எல்லைகள் அடையாளப்படுத்தப்படுவதுடன் நகரத்தில் இருந்து புறநகர்களுக்குச் செல்வதற்கான வழிகாட்டிகள் நிறுவப்படும். அத்துடன் பஸ் தரிப்பிடங்கள், பொதுமக்களுக்கான முக்கிய அறிவிப்பு தொடர்பான விளம்பரப் பலகைகள், பாதுகாப்புத் தகவல் பற்றிய அறிவிப்புப் பலகைகள், தொல்பொருள் முக்கியத்துவம்மிக்க பகுதிகளைக் காட்டும் விவரங்கள் என்பனவும் அமைக்கப்படும்.

துரையப்பா விளையாட்டரங்கு, முத்திரைச் சந்தி சிறுவர் பூங்கா, சுப்பிரமணியம் பூங்கா ஆகியவற்றின் புனரமைப்புத் திட்டங்களும் செயற்படுத்தப்படும் - என்றார். (50-111)

# வாக்காளர் இடாப்பு மக்கள் பார்வைக்கு

யாழ். செயலகத்தில் வாக்காளர் இடாப்பு நேற்று முதல் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்த வாக்காளர் இடாப்பினை யாழ். செயலகத்தில் நேற்றும் பெரும் எண்ணிக்கையானோர் பார்வையிட்டதை அவதானிக்க முடிந்தது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலையொட்டி தேர்தல் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் வாக்காளர் இடாப்பினை நேற்று முதல் மக்கள் பார்வைக்கு வைத்துள்ளது. (50-9)

# உடல் ஊனமுற்றோர் தொடர்பான மாநாடு

கொழும்பு, டிசெ.5

உடல் ஊனமுற்றவர்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தி அவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான மாநாடு கொழும்பில் நடைபெற இருக்கின்றது.

நாட்டில் உடல் ஊனமுற்றவர்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்தவும் அவர்களின் உரிமைகளை வென்றெடுக்கவும் இந்நிகழ்வு இடம்பெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இலங்கை கொன்ரினென்ரல் ஹொட்டலில் பிற்பகல் 2 மணியிலிருந்து 4 மணிவரை நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில் சமூகசேவைகள்மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். நீதித்துறை மற்றும் சட்ட சீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்வார். (ப)

# நாளை

| | |
|---|---|
| கார்த்திகை 20 | 06.12.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | பஞ்சமி |
| | பி.இ.03.47 வரை |
| நட்சத்திரம்: | பூசம் |
| | மு.இ.09.01 வரை |
| சுபநேரம்: | 09.17-10.47 வரை |
| ராகுகாலம்: | 04.47-06.17 வரை |

## ஜனாதிபதியின் வருகையையொட்டி

# புதுப் பொலிவு பெறுகிறது வேம்படி மகளிர் பாடசாலை

யாழ்ப்பாணம், டிசெ.5

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் யாழ்.வருகையினையொட்டி யாழ். வேம்படி மகளிர் கல்லூரி கட்டடங்கள் வர்ணம் பூசப்பட்டுப் புதுப்பொலிவு பெற்றுவருகின்றன.

2010 ஆம் ஆண்டு மாணவர்களின் கல்விச்செயற்பாட்டுக்கான இலவச பாடநூல்கள், சீருடைத் துணிகள் வழங்கும் தேசிய நிகழ்வு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 9 ஆம் திகதி கல்வியமைச்சர் சுசில்பிரேமஜயந்த தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தத் தேசிய நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளவுள்ளார்.

இதனையொட்டி யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியினை வர்ணம் பூசி அழகுபடுத்துவதற்காக கல்வியமைச்சு 2 லட்சம் ரூபாவைக் கல்லூரிக்கு வழங்கியுள்ளது. இதையடுத்து யாழ். வேம்படி மகளிர் கல்லூரி நுழைவாயில், பாடசாலையின் ஏனைய கட்டடங்கள் என்பன வர்ணம் பூசி அழகுபடுத்தப்பட்டு வருகின்றன. இதனால் கல்லூரி புதுப்பொலிவு பெற்றிருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (50-9)

# ஜேர்மன் கலாசாரப் பிரிவின் பணிப்பாளர் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், டிசெ.5

ஜேர்மன் நாட்டு கலாசாரப் பிரிவின் பணிப்பாளர் ரிச்சாட்லாங் நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

இத்தகவலை யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ். மாநகர அபிவிருத்தி குறித்து ஆலோசனைகளை நடத்துவதற்காக வருகை தரும் இவர், இரண்டு நாள்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் யாழ். வரும் இவர், மாநகரசபை அலுவலகம், யாழ். பல்கலைக்கழகம், பொது நூலகம் ஆகியவற்றுக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிடுவார்.

மறுநாள் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். திருமறைக்கலாமன்றம் யாழ். பொதுச் சந்தை ஆகியவற்றுக்கு அவர் விஜயம் மேற்கொள்வார்.

யாழ். மாநகரசபையில் கலாசாரப் பிரிவு அமைப்பதற்கும், யாழ். பொதுச்சந்தையினை நவீன முறையில் அமைப்பதற்கும் நிதி உதவிகளை வழங்குமாறு யாழ். வருகின்ற ஜேர்மன் நாட்டு கலாசாரப் பிரிவு பணிப்பாளர் ரிச்சாட்லாங்கிடம் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது - என்றார். (50-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனம்மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவியும், திரு.வே. குன்பழகன் ஆசிரியரின் மாணவியும், திரு.திருமதி சிவபாஸ்கரன் தம்பதிகளின் செல்வப் புதல்வியுமாகிய

**செல்வி சி.வைதேகி**

2009 ஆம் ஆண்டு 5 ஆம் தரப்புலமைப் பரிசில் பரீட்சையில் 146 புள்ளிகளைப் பெற்றுச் சித்தி அடைந்ததைப் பாராட்டுவதுடன், மேலும் பல்கலையும் கற்று வாழ்வில் உயர்ந்திட வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் - வானத்தில் இருந்து வண்ணமுற வாழ்த்தும் பெரியப்பா மற்றும் பெரியம்மா, கதர்சன் அத்தான், கௌரி அக்கா, ஸ்ரீ அண்ணா, மாதங்கி அக்கா, பிருந்தா அக்கா, அப்பப்பா, அம்மம்மா, மாமா, மாமி, மச்சாள், மச்சான்.

(92865) ஸ்ரீரங்கம், 374, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## Computer Express

INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
No.167, Kasthuriyar Road, Jaffna. Tel: 021 222 8250

**1 வாரகால முழுநேரக் கற்கை நெறிகள்**

**Diploma in Film Technology & Video Editing**

Adobe Photoshop
Cool 3D Studio
VCD Cutter

Capturing
Pinnacle Studio
Adobe Premiere

Internet & e mail

**Diploma in Hardware Engineering & Networking**

System Configuration, Hardware Devices
Assembling, Repairing, Trouble Shooting
Installation of Hardware & Software, Project Works

Internet & e mail

**Diploma in Graphic Designing & Adverdisement Marketing**

Photoshop ,Macromedia Flash
Corel Draw, Cool 3d Studio

Internet & e mail

விண்ணப்பங்கள் ஆரம்பம் :- 07.12.2009 09AM

Free Software CDs

## அரசாங்க அதிபரின் அறிவித்தல்

### மணல் விநியோகம் தொடர்பானது

யாழ்.மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த மணல் விநியோகச் செயற்பாடுகள் 2009.12.07 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள 100 ஆம் இலக்க கட்டடத்தில் இருந்து மகேஸ்வரி ஞாபகார்த்த நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்படும் என்பதனை பயனாளிகள் யாவருக்கும் அறியத்தரப்படுகின்றது.

பயனாளிகள் 2009.12.07 ஆம் திகதி தொடக்கம் 4ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள மகேஸ்வரி ஞாபகார்த்த நிறுவனத்தினரிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

க.கணேஷ்
அரசாங்க அதிபர்,
(சி/563945) மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### வேலன் சின்னையா

எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும், வதிரி, நெல்லியடியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் சின்னையா நேற்று (04.12.2009) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் வேலன் - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் அப்புக் குட்டி, சின்னாச்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும், வசந் தராணி, மனோகரன் (அதிபர், யா/உசன் இராமநாதன் ம.வி), வசந்தமாலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சண்முகநாதன், அகிலா (ஆசிரியை, யா/கீரிமலை நகுலேஸ்வர வித்தி), கனகசுந்தரம் ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2009) சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி: (சி/562943) தகவல்:
வதிரி, நெல்லியடி,(மின்சார சபை எதிர்புறம்). சி.மனோகரன் (மகன்).

### இரத்தினம் சர்வானந்தர்

(ஓய்வுபெற்ற பொறியியலாளர்)



வட்டு.கிழக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சர்வானந்தர் 28.11.2009 சனிக்கிழமை இந்தியாவில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர்) - சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி - மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், வள்ளியம்மனின் (UK) பாசமிகு கணவரும், சொரூபன் (UK), மைதிலி (UK), சோதிலி (UK), ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.நித்தியானந்தன் (UK), அருந்தவேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவசுப்பிரமணியம்(கொழும்பு), சறோஜினி (UK) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அனுஷியாவின் (UK) அன்பு மாமனும் அனிஷின்(UK) அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் புதன்கிழமை (09.12.2009) லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சி.இராஜராம்,
வட்டு.கிழக்கு, சித்தன்கேணி.
T.P: 0213007952 (92862)

தகவல்:
செ.சரஸ்வதி.
(சிறியதாயார்)

## வீடு காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரில் ஏ-9 வீதிக்கு அண்மையாக சப்பச்சி மாவடி வீதியில் அமைந்துள்ள சீட்டுக்கார சிவக்கொழுந்து மாஸ்ரரின் வீடு என ஊரவர்களால் அழைக்கப்படும் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று சாவகச்சேரி இறை குழைக்காடு வளவும் நீலக்கொத்தியாவளவும் என்கின்ற நிர 7 குளி 8 காணியும் அதனுள் அமைந்த வீடும் உடன் விற்பனைக்குண்டு.

தெளிவான சட்டபூர்வமான உறுதியுட்பட அனைத்து ஆவணங்களும் உண்டு.
0718474235

## <= BARATHY =>

**சித்தன்கேணி**
**புதிய வகுப்புகள்**
**தரம் 6 முதல் 11 வரை**

நாளை ஆரம்பம்:- 06.12.2009 ஞாயிறு 8 a.m
எமது தனித்துவமும் அதித்திறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினால்

- ★ விஞ்ஞானம் - N.தேவா, கோகுலன்
- ★ கணிதம் - S.சிவரூபன், சிவா
- ★ தமிழ் - குகபரன், சுஜீதரன்
- ★ வரலாறு - K.சுதன், பிரதாப்
- ★ ஆங்கிலம் - விஜயபாஸ்கர், மனோகரன்
- ★ சமயம் - N.T.தரன், பார்த்திபன்
- ★ சுகாதாரம் - சுபவதனி
- ★ வணிகக்கல்வி - லோகேஸ்வரன்
- ★ புவியியல் - சர்வேஸ்வரன்

(சி/562931)

குறிப்பு:-
I. விடுமுறைகால வகுப்புகள் நடைபெற இருப்பதால் உங்கள் அனுமதிகளை தாமதியாது உடன் பெற்றுக்கொள்ளவும்.
II. மேற்குறிப்பிட்ட உங்கள் பிரபல ஆசான்கள் இப்பிரதேசத்தில் வேறு எந்த நிறுவனங்களிலும் கற்பிக்கமாட்டார்கள்.
III. சென்றாண்டு போல் இவ்வாண்டும் மாணவர்கள் தொகை வரையறுக்கப்பட்டுள்ளது.
உங்கள் அனுமதிகளை உடன் பெற்றுக்கொள்ளவும்.

தரம் 5 புலமைப்பரிசில் வகுப்பு ஆரம்பமாகி நடைபெறுகின்றது.
ஆசிரியர்:- கலாமோகன்

### வட்டுக்கோட்டையில் இன்று மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், டிசெ.05.

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் நடத்தப்படுகின்ற நடமாடும் இலவச மருத்துவ முகாம் இன்று சனிக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

வட்டுக்கோட்டைப் பிரதேச மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு நடத்தப்படுகின்ற இந்த இலவச நடமாடும் மருத்துவ முகாமில் பொதுமக்கள் கலந்துகொண்டு பயன்பெறுமாறு வட்டுக்கோட்டை பொலிஸார் கேட்டுள்ளனர்.

(ஓ-9-93)

## கிறிஸ்ரல் சென்ரர்

நெல்லியடி - திக்கம்
A/L 2010 Day கலைப்பிரிவு
ஆரம்பம் 07.12.2009 மு.ப 9.00

| | |
|---|---|
| Tam: | நந்தன் |
| H.C: | சீலன் |
| Log: | சிறிராம் |
| Geo: | ஜெராட் |
| Sat: | தவசேகர் |
| Eng: | ரஞ்சித் |

★ A/L Day வர்த்தகப் பிரிவு ஆரம்பமாகிவிட்டது.

தரம் 3 - தரம் 11 வரை
ஆரம்பம்: 12.12.2009

## லைடன் புடைவை நிலையம்

இல.410 ஆஸ்பத்திரி வீதி (பஸ்நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அதிரடி விலைக்குறைப்பு

01.12.2009 ——— 31.12.2009

எமது அன்பிற்கினிய வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு

(சி/562757)

ஆடவர், பெண்களுக்கான அனைத்து துணி வகைகளுக்கும் கழிவுண்டு. ரெடிமேட் ஆடைகளுக்கு அதிகூடிய கழிவுண்டு.

## சித்தாரா பொன்னாங்காணி தைலம்

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?
இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரை குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்

Manufactured By:
Sithara Products
Puttalam, Road, Chilaw.
(Reg.No: 6382)AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப்பூங்கா
இல.288,ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

## நவாலியூர் - அமரர் சதீஷ் இற்கு ஆண்டு 1



தோற்றம் 18 ★ 02 ★ 1976
மறைவு 16 ★ 11 ★ 2008

**மறைந்த நவாலியூர் செ.சதீஷ்**
(சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் -V.S.W நவாலி)
திதி: 05.12.2009

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், மதியபோசன நிகழ்வும் இன்று மு.ப. 11 மணிக்கு இடம்பெறும். சதீஷின் அன்பர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

ஹேமா இல்லம்,
நவாலி. (சி/562941) குடும்பத்தினர்.

## நெடுந்தீவு பிரதேச சபை
## சந்தை, இறைச்சிக் கடை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2010

நெடுந்தீவு பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பொதுச் சந்தை, இறைச்சிக்கடை ஆகியன 01.01.2010 ஆம் திகதி தொடக்கம் 31.12.2010 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 16.12.2009 நண்பகல் - 12 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 17.12.2009 காலை 10 மணி
கேள்வி திறக்கும் திகதி: 17.12.2009 பிற்பகல் 2 மணி

| இல. | குத்தகையின் வகை | சபைக்கு செலுத்த வேண்டிய மாத வாடகை | ஆகக்குறைந்த கேள்வித் தொகை(வற்வரி தவிர்ந்த) | கேள்விப் பிணைப் பணம் | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01. | மாட்டிறைச்சிக்கடை | 150.00 | 50,000/- | 3,000/- | 500/- |
| 02. | பொதுச்சந்தை | - | 5,000/- | 1500/- | 500/- |

1. கேள்விப்பத்திரம் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை செயலாளர், நெடுந்தீவுப் பிரதேச சபை, நெடுந்தீவு என்ற முகவரிக்கு அரக்கு முத்திரை இட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுனராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
3. கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
4. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
5. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் சந்தைக்குரிய கேள்வித்தொகையின் 1/3 பகுதியையும் இறைச்சிக்கடைக்குரிய கேள்வித் தொகையின் 2/3 பகுதியையும் 24.12.2009 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ள வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் நெடுந்தீவு பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ்.தம்பிராசா
செயலாளர்
நெடுந்தீவுப் பிரதேசசபை.

நெடுந்தீவுப் பிரதேசசபை
04.12.2009 (சி/562934)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமூகநல எழுத்தாளர் டாக்டர் ஆ.பேரின்பநாதன் எழுதிய இரு நூல்களின் வெளியீட்டு விழா அண்மையில் யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மங்கள விளக்கை ஏற்றுவதையும் அருட்பணி லியோ ஆம்ஸ்ரோங் ஆசியுரை வழங்குவதையும் முதல் இரு படங்களில் காணலாம்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சண்முகலிங்கன், முன்னாள் துணை வேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர்களான கா.குகபாலன், எஸ்.சிவசாமி ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள படங்களிலும், 'வாழ்வியல் கல்வி' என்ற நூலின் முதற்பிரதியை திருமதி க.பாலசுந்தரம்பிள்ளையிடமிருந்து தொழிலதிபர் து. குருநாதசிவம் பெற்றுக்கொள்வதை இறுதிப் படத்திலும் காணலாம்.



# கைதடி சித்த வைத்தியசாலையில் நிகழ்வுகள் நேற்றுக் காலை ஆரம்பம்

## நாளை அமைச்சர் கரலியத்த வருகிறார்

வண்ணை,டிசெ.5

கைதடி சித்த ஆயுள்வேத வைத்திய சாலை வளாகம் கோலாகல விழாக்கோலம் பூண்டுள்ளது; நேற்று வெள்ளிக்கிழமை தொடக்கம் நாளை ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று தினங்கள் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் வைத்தியசாலையை மையமாகக் கொண்டு நடைபெறுகின்றன.

இந்த நிகழ்வுகளில் மகரக, நாவின்ன ஆயுள்வேத திணைக்களத்திலிருந்து ஆணையாளர் திருமதி ரமணி குணவர்த்தன மற்றும் உத்தியோகத்தர் பலர் கலந்து கொள்கின்றனர்.

நேற்றுக் காலை 9 மணிக்கு ஆயுள்வேத திணைக்களத்தின் நடமாடும் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது. பிற்பகல் ஒரு மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் மாணவர்களுக்கான மூலிகை சம்பந்தமான கருத்தரங்கு நடைபெற்றது.

ஞாயிறு இடம்பெறவுள்ள நிகழ்வுகளில் அமைச்சர் திஸ்ஸ கரலியத்த கலந்து கொள்வார்.

சேதமடைந்த நோயாளர் விடுதிகள் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட இருக்கும் அதேசமயம் நடமாடும் வைத்திய சேவை மற்றும் அக்குபஞ்சர் சிகிச்சை நிலையம் போன்றனவும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

(ஒ-160-288)

## வழிகாட்டல் செயலமர்வு

மக்கள் சபைச் செயலாளர் பதவிக்கு வேலையற்ற பட்டதாரிகளைச் சேர்ப்பது தொடர்பான தெரிவுக்கான வழி காட்டல் செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறைப் பேராசிரியர் மா. சின்னத்தம்பி கருத்துரை நிகழ்த்தவுள்ளார்.

(50-204)

## யாழ்.நகரில் 30 வருடங்களுக்கு மேல் கவனிப்பாரின்றிக் காணப்படும் ஒழுங்கை



யாழ்ப்பாணம்,டிசெ.5

யாழ்ப்பாண பிரதான வீதியான கஸ்தூரியார் வீதியையும், கே.கே.எஸ்.வீதியையும்-இணைக்கும் முதலாம் ஒழுங்கை சுமார் 30 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படாமல் மழை காலங்களில் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றது. இதனால் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். இந்த மக்களின் அவலநிலையைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் இந்த வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஓ-9-16)

# தேசிய மெய்வன்மை அலுவலர்களாக யாழ்ப்பாணத்தில் நால்வர் தெரிவு

யாழ்ப்பாணம்,டிசெ.5

இலங்கை மெய்வன்மைச் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த ஒக்ரோபர் மாதம் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச மெய்வன்மைச் சங்கத்தின் தொழில்நுட்ப அலுவலர் தரம்1 பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்து அதற்கான பரீட்சையில் சித்தியடைந்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நால்வர் தேசிய மெய்வன்மை அலுவலர்களாகத் தகைமை பெற்றுள்ளனர்.




யாழ்ப்பாண மெய்வன்மைத் தொழில்நுட்ப அலுவலர்களான செல்வி ராதை அருளம்பலம், பத்மநாதன் முருகவேல், மரியதாஸ் பேர்ட்டிபனிஸ்டர், தம்பிராஜா சிவசோதி ஆகியோரே மேற்படி தகைமையைப் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கு சர்வதேச மெய்வன்மைச் சங்கத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பங்கு பற்றுவதற்காக இந்த நான்கு பேரும் இன்று சனிக்கிழமை கொழும்புக்குச் செல்கின்றனர்.

(50-23)

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு சி.டி.எம்.ஏ தொலைபேசிக்கு விலைக்கழிவு

யாழ்ப்பாணம், டிசெ. 5

யாழ். ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் தற்போது சி.டி.எம்.ஏ. தொலைபேசி கொள்வனவாளர்களுக்கு விசேட விலைக் கழிவுகளை வழங்கிவருகிறது.

நத்தார் பண்டிகையை முன்னிட்டே கடந்த முதலாம் திகதி தொடக்கம் எதிர் வரும் 31ஆம் திகதி வரையுமே இந்த விசேட விலைக்கழிவு வழங்கப்படும் என்று யாழ். ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவன உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முதற் கொடுப்பனவு மூலம் பணம் செலுத்தும் சி.டி.எம்.ஏ தொலைபேசியின் விலை 4 ஆயிரத்து 618 ரூபாவுக்கும் பிற்கொடுப்பனவு முறை மூலம் 5ஆயிரத்து 750 ரூபாவுக்கும், இன்ரநெற் சி.டி. எம்.ஏ தொலைபேசியின் விலை 5 ஆயிரத்து 750 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாக அந்த அதிகாரி மேலும் கூறினார்.

'புறோட் பாண்ட்' இன்ரநெற் வசதிக்கான ஏ.டி.எஸ்.எல். உபகரணத்தைக் கொள்வனவு செய்வோருக்கு 10வீத விலைக்கழிவு வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

மேலும் சி.டி.எம்.ஏ. தொலைபேசிக்குரிய பணம் மீள் நிரப்பும் அட்டை ஒன்றினைப் பெறுமதிக்கு ஏற்ப 50வீதம் மேலதிகமாக வழங்கப்பட்டு வருகிறது எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(50-14)

# பேராசிரியர் கைலாசபதி நினைவு தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.5

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறையின் ஏற்பாட்டில் பேராசிரியர் கைலாசபதி நினைவு தின நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட புதிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.




யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பேராசிரியர் கைலாசபதி நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் நிகழ்த்துவார்.

''நவீன தமிழ்க்கவிதை'' என்னும் தலைப்பில் கவிஞர் சோ.பத்மநாதன் சிறப்புரை வழங்குவார்.

(50-201)

# தென்மராட்சிப் பகுதி மக்களுக்கான பிறப்பு, இறப்பு பதிவு நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், டிசெ. 5

தென்மராட்சிப் பிரதேச மக்களுக்கான பிறப்பு, இறப்பு, விவாகம்ஆகிய காலங் கடந்த பதிவுகள் தொடர்பான நடமாடும் சேவை எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

இதுவரை பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகளை மேற்கொள்ளாத தென்மராட்சிப் பிரதேச மக்களும் ஏனைய மாவட்டங்களிலிருந்து அப்பிரதேசத்தில் தங்கியுள்ள மக்களும் நடமாடும் சேவையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து பயன்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நடமாடும் சேவையில் பங்குபற்றவுள்ள மக்கள் இந்தச் சேவைக்குரிய ஒழுங்குகள் மேற்கொள்வதற்காக பிரதேச செயலக உதவிப் பதிவுகாரர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 90 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் சின்னத்தம்பி தியாகராசா

**மண்ணில் :**
**05.05.1947**

**விண்ணில் :**
**07.09.2009**

தொண்ணூறு நாள்களாகிய போதினிலும்
தொலைந்துவிட்ட உம்முயிரின் பிரிவதனால்
துயரத்தில் நாமின்று துவள்கின்றோம் - தினம்
துன்பக் கடலதனில் மூழ்கின்றோம்
எத்தனை நாள்கள் இங்கு ஆனபோதும்
எம் தலைவன் உங்களுக்கு நிகரேது - இப்பூமியிலே
நீங்கள் இல்லா வீடு இன்று வெறிச்சோடியது
நிம்மதி ஏதும் இன்றி நாங்கள் இங்கு தவிக்கின்றோம்
உற்றவொரு துணையதுவாய் உம் ஆத்மா எம்முடன்
உடனிருந்து நல்லதொரு வழியதைக் காட்டுமப்பா!
கண்ணகை அம்மன் தாள்களினை
களிப்புடனே பற்றிவிட்ட நீங்கள் இங்கு
காலமெல்லாம் கண்ணின் இமைபோல
காத்திடுவீர் எம் குடும்பக் குலவிளக்கே....!



இல.100, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் மீதான கொடுமைகளைப் பார்த்துக் கொண்டிருந்த இந்தியாவும் சர்வதேசமும் வரலாற்றுக்குப் பதில் சொல்லியாக வேண்டும்

## மனோ கணேசன் எடுத்துச் சொல்கிறார்



**தார்மீக உரிமை**

பல்லாண்டுகளாகநமது மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து நிற்கும் பொழுது நாம் நமது மக்களுடன் இருந்து கொண்டிருக்கின்றோம். பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நாம் எமது கடமையை உறுதியுடன் செய்துவந்துள்ளோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் பேரினவாதிகளுக்கு துணைபோனது கிடையாது. நமது ஜனநாயக மக்கள் முன்னணி தேர்தல் காலங்களில் மாத்திரம் தமிழ் மக்களை நாடிவரும் கட்சியல்ல என்பதை தமிழ் மக்கள் நன்கு அறிவார் கள். எனவே தமிழ் மக்களுக்கு வழிகாட்டுவதற்கும், கோரிக்கை விடுப்பதற்கும் ஜனநாயக மக்கள் முன்னணிக்கு முழுமையான தார்மீக உரிமை இருக்கின்றதாக நாங்கள் நம்புகின்றோம்.

நான்கு சாத்தியங்களில் இதுவே நடைமுறை சாத்தியமானது

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் முன்னால் நான்கு சாத்தியங் கள் இருப்பதாக நாங்கள் ஏற்கனவே தெரிவித்திருந்தோம். எதிர்க்கட்சி கூட்டணிக்கு வாக்களிப்பது, ஆளுங்கட்சி கூட்டணிக்கு வாக்களிப்பது, பொது தமிழ் வேட்பாளரை நியமித்து வாக்களிப்பது, தேர்தலை பகிஷ் கரிப்பது ஆகியவை

**பகிஷ்கரிப்பு எங்களுக்கு உடன்பாடானது அல்ல**

கடந்த ஜனாதிபதித் தேர்தல் கால கட்டத்திலிருந்து இன்றுவரையும் தேர்தல் பகிஷ்கரிப்பை நாம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இந்நிலையில் நாங்கள் வாக்களித் தாலும், வாக்களிக்கா விட்டாலும் கொழும்பில் ஆட்சி அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளும் அணியின் அதிகாரம் தமிழ் மக்கள் மீது பாதிப்பை செலுத்துகின்றது. இந் நிலையில் எமது வாக்களிப்பின் மூலமாக அந்த அதிகார அணியை இயன்ற வரையில் எமக்கு சாதகமாக மாற்றிக்கொள்ள வேண்டிய தேவை தமிழ் மக்களுக்கு இருக்கின்றது. இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? என்று தமிழ் மக்கள் தேர்தலில் அக்கறையின்றி இனிமேலும் இருக்கமுடியாது. இங்கே போட்டியிடும் இருவருமே இராவணர்கள் தான். இந்த இராவணர்களில் பெரிய இராவணன் யார்? சின்ன இராவணன் யார்? என்று சிந்தித்து முடிவு செய்யவேண்டிய நிலைமையில் தமிழ் இனம் இருக்கின்றது. இதைத் தவிர நடைமுறை சாத்தியமான மாற்றுவழிகிடையாது. மனசாட்சிப் படி மக்களை வாக்களிக்கக் கோரமுடியாது. தமிழ் மக்களிடம் தமது சொந்த விருப்பத்தின்படி வாக்களியுங்கள் எனக் கூறிவிட்டு எமது கடமையில் இருந்து நாம் நழுவ முடியாது. தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் மக்களுக்கு தலைமைத்துவம் வழங்கி வழிகாட்டவேண்டிய வரலாற்றுக் கடமையை நாம் நிறைவேற்றுவோம். ஏனைய தமிழ் கட்சிகளும் மக்களுக்குத் தெளிவாக வழிகாட்டவேண்டும் என நாம் கோருகின்றோம்.

**சர்வதேச சமூகம்**

கடந்த பல தசாப்பதங்களாக தமிழ் மக்கள் ஜனநாயக போராட்டத்தின் மூலமாகவும், ஆயுத போராட்டத்தின் மூலமாகவும் உலகத்திற்கு தமது அபிலாசைகளை மீண்டும் மீண்டும் எடுத்து கூறியிருக்கின்றார்கள். மலையக தமிழர்களின் குடியுரிமை பறிப்பிலிருந்து, சிங்களம் மட்டும் சட்டம், தந்தை செல்வாவின் ஒப்பந்தங்கள் உள்ளிட்டு நடந்து முடிந்த போரின் இறுதிக்காலக் கட்டங்களில் நமது மக்கள் பல்லாயிரக்கணக்கில் கொல்லப் பட்டது வரை, அனைத்தையும் இந்த உலக சமுதாயம் பார்த்துக்கொண்டுதான் இருந்தது. சர்வதேச சமூகமும், குறிப்பாக இந்திய அரசு எதுவும் தெரியாத அப்பாவிகள் என எவரும் சொல்ல முடியாது. தமிழ் மக்களின் மீதான கொடுமைகளுக்கு சர்வதேச சமூகம் மிகப் பெரும் பதிலை வரலாற்றுக்கு சொல்லியே ஆகவேண்டும். எமது மக்கள் தொடர்பில் இந்தியா உட்பட சர்வதேச சமூகம் தமது கடமையை சரியாக செய்யவில்லை என்பது மறுக்கப்படமுடியாத உண்மை. எனவே எமது ஜனநாயக செயற் பாட்டிற்கு இந்தியாவும், சர்வதேச சமூகமும் துணை வருவதை வரவேற் போம். ஆனால் எமது எதிர்காலத்தை முழுமையாக சர்வதேச சமூகத்திடம் மாத்திரம் ஒப்படைத்து விட்டு நாம் எதிர்பார்த்து காத்திருக்க முடியாது. உலக சமுதாயத்திற்கு எடுத்துக் கூறுகின்றோம் என்று சொல்லி எமக்குரிய சந்தர்ப்பங்களை நாம் கைநழுவிவிட முடியாது.

**"ஆட்சி மாற்றத்துக்காக, பொன்சேகாவை தமிழ்க் கூட்டமைப்பும் ஆதரிக்க வேண்டும்" என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் வெளியான ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசனின் அறிக்கையின் மிகுதிப் பகுதி இங்கே பிரசுரமாகின்றது.**

**இன்றைய அரசு**

இன்றைய அரசுக்கு வாக்களிப் பதற்கு தமிழ் மக்களுக்கு எந்தவொரு காரணமும் கிடையாது. தேசிய இனப்பிரச்சினை தொடர்பிலும், மனித உரிமைகள் தொடர்பிலும் இந்த அரசு தமிழ் மக்களின் மனங்களை வெல்வதற்கு கிடைத்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பத்தையும் இந்த அரசு தவறவிட்டு விட்டது. தேசிய இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் இன்று இந்த அரசுக்குள்ளேயே தமிழ் கட்சிகளுக்கும், சிங்கள தீவிரவாத கட்சிகளுக்கும் இடையில் முரண் பாடுகள் முற்றியுள்ளன. இந்தியா விடம் ஒன்றும், ஏனைய சர்வதேச சமூகத்திடம் ஒன்றும், சிங்கள மக்களிடம் ஒன்றும், தமிழ் மக்களிடம் ஒன்றும் என மாற்றி, மாற்றி பேசி தமிழ் மக்களின் வாழ்க்கையையும், மண்ணையும் அபகரிக்கும் நோக்கம் இந்த அரசின் அடிப்படை வேலைத் திட்டமாகும். இன்று எதையாவது சொல்லி தமிழ் மக்களின் வாக்கு களையும் வாங்கி ஆட்சி அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதே இவர்களது நோக்கம். இவர்களது ஆட்சி தொடருமானால் பல இனங்களுக்கும், பல மதத்த வர்களுக்கும் சொந்தமான நமது நாடான இலங்கை ஒரே இனத்திற்கும், ஒரே மதத்தவருக்கும் மாத்திரமே சொந்தமான நாடாக விரைவில் மாற்றப்படும். இது ஒன்றே இந்த அரசின் ஒரேயொரு அரசியல் நிகழ்ச்சி நிரலாகும்.

**எதிர்க்கட்சி பொது வேட்பாளர்**

சரத் பொன்சேகாவிற்கு வாக்களிப்பதானது எமது வரலாற்று கடமையல்ல. அது நம் வாழுகின்ற காலத்தின்கட்டாயமாகும். சரத் பொன்சேகா நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாக ஐக்கிய தேசிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய இரண்டு அணியிடமும் உறுதியளித் துள்ளார். கடந்தகால ஜனாதிபதிகளின் இத்தகைய உறுதிமொழிகளுக்கும், தற்போதைய நடைமுறைக்கும் இடையில் இருக் கின்ற வேறுபாடுகள் சிந்திப் பவர்களுக்கு புரியும். கடந்த முறைகளில் ஜே.வி.பி மாத்திரமே நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை எதிர்த்தது. இன்று ஏறக்குறைய எல்லாக் கட்சிகளும் இதை எதிர்கின்றன. சரத் பொன்சேகா பாரம்பரிய அரசியல்வாதியல்ல. அவருக்கு அரசியல்கட்சி கிடையாது. அவர் இராணுவ வீரராக இருந்துள்ளார். தமிழ் மக்களை பொறுத்தவரையிலே இராணுவ ஆட்சி என்பது புதியதோர் அனுபவமல்ல. ஆனால் அது சிங்கள பெரும்பான்மை மக்களுக்கு புதிய விடயமாகும். எனவே இராணுவ ஆட்சி ஏற்படும் சாத்தியம் கிடையாது. இது அரசின் கட்டுக்கதையாகும்.

**13ஆவது திருத்தமும், தேசிய இனப்பிரச்சினையும்**

பொது வேட்பாளர் சரத்பொன்சேகா 13ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என பகிரங்கமாக கூறியிருப்பது நல்ல விடயம். இந்த நிலைப்பாடு கூட இதுவரையில் ஆளுங்கட்சியின் வேட்பாளர் கூறவில்லை. சரத்பொன்சேகா தான் நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்பதாக அவரே உறுதியளித்துள்ள காரணத்தினாலே அவர் இடைக்கால ஜனாதிபதியாகலாம். எனவே தொடர்ந்து ஜனாதிபதியாக இருக்கப் போகின்ற இன்றைய ஆளுங் கட்சியின் வேட்பாளர் தான் தமது தீர்வுத் திட்டத்தை உடனடியாக அறிவிக்க வேண்டும். மேலும் ஆளுங்கட்சியிடம் இன்று ஆட்சி இருக்கின்ற காரணத்தினாலேயே அவர்கள் அடுத்த தேர்தல் வரை காத்திருக்கத் தேவையில்லை. 13ஆவது திருத்தத்தை முழுமையாக உடன் அமுல்செய்துவிட்டுஅதற்குப்பிறகு 13ஆவது திருத்தத் திற்கு அப்பால் அரசாங்கம் செல்ல வேண்டும். அதே வேளையில் இனப்பிரச்சினை தீர்வை ஜனாதிபதி சரத்பொன்சேகாவிடம் நாம் விட்டு விடப் போவதில்லை. அடுத்த வருடம் முற்பகுதியில் நடைபெறவிருக் கும் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் உருவாகும் தேசிய அரசின் முதற் கடமை தேசிய இனப்பிரச்சினைக் கான தீர்வாகும்.

**சரத் பொன்சேகாவிடம் நாம் ஏற்படுத்திக்கொண்டுள்ள உடன்பாடுகள்**

ஜனாதிபதி தேர்தலை அடுத்து ஐ.தே.க, ஸ்ரீ.ல.சு.க மக்கள் பிரிவு, ஜனநாயக மக்கள் முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட ஐக்கிய தேசிய முன்னணிக்கும், ஜே.வி.பிக்கும், தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும் அழைப்பு விடுத்து சர்வகட்சிகளையும் உள்ளடக்கிய காபந்து அரசாங்கத்தை ஜனாதிபதி நியமிப்பார். பொதுத் தேர்தலை தொடர்ந்து புதிய அரசு உருவாகும் வரைக்கும் இந்த காபந்து அரசு செயற்படும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாது ஒழிக்கும் நடைமுறை ஆரம்பிக்கப்படும். ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்படும். 17ஆவது திருத்தம் நடைமுறையாக்கப் பட்டு, சுயாதீன ஆணைக்குழுக்கள் உடன் நியமிக்கப்படும். உடனடியாக எரியும் பிரச்சினைகளான தமிழ், முஸ்லிம் அகதி மக்களின் மீள்குடி யேற்றம், சிறைகளிலும், தடுப்பு முகாம்களிலும் வாடும் தடுப்பு கைதிகள் விவகாரம் ஆகியவை தொடர்பில் இரண்டு தேசியசபைகள் நிறுவப்படும். நமது மக்கள் தமது சொந்தக் கிராமங்களில் சென்று குடி யேறுவதை மக்கள் பிரதிநிதிகள் கண்காணிப்பார்கள். அதேபோல் நீண்டகால கைதிகளுக்கு பொது மன்னிப்பு, துரித சட்ட நடவடிக்கை, புனர்வாழ்வு ஆகியவை உடனடியாக முன்னெடுக்கப்படும். இந்த விவ காரங்கள் தொடர்பில் நான் நேரடியாகப் பங்களித்து கண் காணிப்பேன் என்பதை உறுதிப்பட தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)










மாற்று வலுவுள்ளோர் தினவிழா அண்மையில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயப் பொது மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கரவெட்டிப் பிரதேசசெயலர் எஸ். சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட திருமதி இராஜேஸ்வரி சத்தியசீலன்,நெல்லியடி மத்தியமகா வித்தியாலய அதிபர் செ. சேதுராஜா அமர்ந்திருப்பதையும், வலுவுற்றோரின் விநாயகர் குழுநடனம் இடம்பெறுவதனையும் முதல் இரண்டு படங்களிலும், சிறப்பு விருந்தினர் திருமதி இராஜேஸ்வரி சத்தியசீலன் மாணவன் ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச் சுடர் 64

# இறுதி மாதிரி வினாத்தாள்கள்

## தொகுதி II

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## English Language - I 31-T-I

**Answer all questions on this paper itself.**

Test - 01.

Match the instructions (A) with the apparatus (B). Write the letter of the instruction in the correct box.

| Instructions (A) | Apparatus (B) | |
|---|---|---|
| a) Replace the receiver. | Torch. | ☐ |
| b) Press the shutter release. | Television. | ☐ |
| c) Take a print out. | Computer. | ☐ |
| d) Rewind the cassette. | Telephone. | ☐ |
| e) Change the batteries. | Tape Recorder. | ☐ |
| f) Select the channel 9. | Camera. | ☐ |

Test - 02.


Read the following news item and fill in the table.

There will be several net ball matches played over the week. Vishaka Vidyalaya will meet Bambalapitiya Girl's College on 28th Wednesday at Vishaka Vidyalaya Court. In the other two matches Matale Balika M.M.V. on 29th Thursday. Bambalapitiya Girl's College will play against Beligama M.V. at Bambalapitiya Girl's College Court on 30th Friday.

| Team | Date | Venue |
|---|---|---|
| Vishaka Vidyalaya VS Bambalapitiya Girl's College. | 1) ................. | Vishaka Vidyalaya Court |
| Matale Balika M.M.V 3) .................................... | 29th Thursday | 2) .......................... |
| VS 4) .................................... | 5) .............. | Bambalapitiya Girl's College. |

Test - 03.

Read the particulars written on the Packet and find out the following information.




1) Name of product: ..........................................
2) Net weight: ..........................................
3) Manufacturer's name: ..........................................
4) Retail price of the product: ..........................................
5) Expiry date: ..........................................

Test - 04.

Write five sentences about the picture.



..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................

Test - 05.

Fill in the blanks with correct words given in the box.

| | |
|---|---|
| Sells | Full of colour |
| Profitable. | Painting scenery |
| Paints for exhibition | Figures |
| For pleasure | Water colours and |
| Crayons. | |

Ram's hobby is painting. He uses 1) ....... ......... in his paintings. He likes painting 2) ...................... He also likes 3) ........................ His painting are 4) ........................ He often paints 5) ........................ But sometimes he 6) ...................... too. At times he 7) ........................ his paintings. His friends say his hobby is a 8) ........................ one.

Test - 06.

Imagine you have passed the G.C.E. (O/L) with 9 A, and you like to arrange a party to celebrate your happiness and success. Write a letter to your friend inviting him/her to the party. Include the following such as date, venue, time and your purpose in your letter.

..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................

Test - 07.

Read the dialogue between Neela and receptionist at the British Council inquiry desk. Complete the blanks with suitable words. The first letter of each word to be completed is given. One has been done for you.

Neela: Excuse me miss.
Receptionist: Yes, Can I help you?
Neela: I am a student of Balika Vidyalaya. I would like to become a member of your library. Can you please give me some 0) i........................ about what I should do?
Receptionist: You need to fill these 1) a.............................. forms with 2) r...................... particulars. Then you will be issued with a 3) m.................... card.
Neela:- Why are there two forms ?
Receptionist: One is to be filled by you. The other is a guarantee card to be completed by a 4) g..........................., as you are a student this has to be 5) s................ by your principal.
Neela: How much do I have to pay?
Receptionist: For student, the 6) f.................. is Rs. 300/=
Neela: How many books are allowed for a 8) p................. of three weeks.
Neela: I'll 9) b...................... these forms next week. Thank you very much.
Receptionist: You are 10) w..............................................

Test - 08.

Read the following passage and answer the questions given below.

### SWITZERLAND

Switzerland is right in the heart of Europe. It is surrounded by four countries with France, on the West. Austria on the East, the United Germany in the colder North, and Italy in the Sunny South.

Over the half of the country is covered with the Alps, sixteen mountains rise from the Swiss soil and the highest point- Mount Blank is found in France, not far from swiss border.


Switzerland has no wastline of her own. Bern is the capital of Switzerland. But many International Organizations - UNO, WHO, ILO have their Head Quarters in Geneva.

1) What are the Countries that surround Switzerland?
..............................................................................
2) How many mountains are there in Switzerland?
..............................................................................
3) Where is the Mount Blank found?
..............................................................................
4) Which is the capital of Swiss?
..............................................................................
5) Name two International Organizations that have Head - offices in Geneva?
..............................................................................

Continued on page (13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



திருப்பாலர்சபை சிறுவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் அஞ்சனந்தாழ்வு ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் இடம்பெற்றது.

சின்னம் சூட்டப்பட்ட 18 திருப்பாலர் சபைச் சிறுவர்களுடன் சபை இயக்குநர் அருட்பணி அ.ப.அன்ரனிப்பிள்ளை அடிகள், பங்குத்தந்தை அருட்பணி ஜே.நீக்கிலஸ் அடிகள் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.



அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் ஒளிவிழா நிகழ்வுகள் அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்ட அளவெட்டி புனித சூசையப்பர் ஆலயப் பங்குத் தந்தை அருட்பணி புனிதகுமார் அடிகள் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்ட ஆசிரியர்கள், மாணவர்களையும் படத்தில் காணலாம்.

[படம்:நேசன்]



ஆனைக்கோட்டை உப தபாலகத்தில் தேசிய சேமிப்பு வங்கியின் அஞ்சல் வங்கிக் கிளையால் சேமிப்புக் கணக்குகள் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. நிகழ்வில் யுவதி ஒருவர் புதிதாகக் கணக்கைத் திறந்து கணக்குப் புத்தகத்தையும் பரிசுப் பொருளையும் வங்கி முகாமையாளர் ஆர்.இராசமகேந்திர சிங்கத்திடம் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம். [படம்: நவாலிச்செய்தியாளர்]




வடபிராந்திய சம்மேளனத்தின் தெல்லிப்பழைப் பிரிவு புற்றுநோயாளர்களுக்கு அன்பளிப்பு வழங்கும் நிகழ்வு அண்மையில் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் காரியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் புற்று நோயாளர் ஒருவருக்குத் தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ். முரளிதரன் அன்பளிப்பு வழங்குவதைக் காணலாம்.



இயற்றாலை அமெரிக்கன்மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் விஞ்ஞான செயற்பாட்டுப் பட்டறை அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சிக் கல்வி வலய விஞ்ஞானப் பாடத்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏச்.கந்தசாமி, கல்லூரி அதிபர் எஸ்.கந்தசாமி ஆகியோர் ஆசியர்கள் சகிதம் பட்டறைச் செயற்பாடுகளை உற்றுநோக்குவதைப் படத்தில் காணலாம்.



காரைக் கிட்ஸ்பார்க் பாலர் பாடசாலையில் ஆசிரியர் தின விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ற்ரன் கல்லூரியின் ஆங்கில ஆசிரியர் திருமதி ஜெகதாம்பிகை அருட்செல்வம் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்குப் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். [50 - 250]



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் ஐ.நா. தின நிகழ்வு அண்மையில் மட்டுவில் காந்திபுர ஸ்கந்த வரோதய மகா-வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வித்தியாலய அதிபர் புலவர் மு.பாலசுப்பிரமணியம் ஐ.நா. சபைத் தின உரை நிகழ்த்துவதையும், லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ப.செல்லத்துரை உட்படக் கழக உறுப்பினர்களும், ஆர்வலர்களும் அமர்ந்திருப்பதையும் படத்தில் [illegible] [50-207]



பருத்தித்துறை, புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் ஒன்றரைக்கோடி ரூபா செலவில் நிக்கொட் நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்ட புதிய மாடிக் கட்டடத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.டக்ளஸ்தேவானந்தா, சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, நிக்கொட் நிறுவன பிரதித் திட்டப் பணிப்பாளர் ஆர். சிவரூபன் ஆகியோர் அழைத்துவரப்படுவதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகி

# யாழ் இந்து ஆரம்ப பா

| சு.செந்தூர | ஸ்ரீ.யுவேதா | ஸ்ரீ.சதுர்த்திகா | க.தேவந்தி |
|---|---|---|---|
| 185 புள்ளிகள் | 181 புள்ளிகள் | 180 புள்ளிகள் | 179 புள்ளிகள் |
| மாவட்ட நிலை 3 | மாவட்ட நிலை 6 | மாவட்ட நிலை 7 | மாவட்ட நிலை 8 |

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2009 இல் 118 மாணவர்களைச் சித்தியடையச் செய்து 54.12 % சித்தி மூலம் யாழ். மாவட்டத்திலும் வடக்குக் கிழக்கு மாகாணத்திலும் அகில இலங்கையிலும் முன்னனிப் பாடசாலைகளில் ஒன்றாக இருப்பதற்குக் கடின உழைப்பால் உயர்வுகள் பெற வைத்த அதிபர், உபஅதிபர், பகுதித் தலைவர்கள், தர இணைப்பாளர்கள், ஆசிரியப் பெருந்தகைகள் அனைவரையும் மனம் நிறைந்து நன்றியுணர்வோடு பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

ன்று 5.12

முதல் 21 மார்கள் தங்க

| | | | |
|---|---|---|---|
| நி.பிருந்தாபன் 177 | இ.தாக்ஷாயினி 177 | ச.கீதசபா 177 | தனுஷா 174 |
| அ.கேசவி 169 | மோ.சாத்வீகன் 169 | அ.சங்கீதன் 167 | நிருஷன் 167 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வி.தனுஜன் 165 | சி.சரண்யசர்மா 164 | சு.சாயிசங்கர் 163 | றோ.வித்தகன் 163 | ச.பவதாங்கினி 163 | சு.கஜித் 163 | வி.சனந்தன் 163 | கி.தேனுகா 162 | க.வைஷ்ணவி 162 | அ.சாம்பவி 162 | ளரிசங்கர் 162 |
| தி.மயூரன் 160 | தே.ஹயாணன் 160 | ச.அபிநயா 160 | க.பிரியங்கன் 160 | பி.மதுஷா 160 | ரு.ஜனார்த்தனன் 159 | பா.யதுநந்தனசர்மா 157 | ஆ.சாம் ஜோயல் நிரோஷன் 157 | வி.சிறிகஜன் 157 | ப.ரிஷாந்தி 157 | லக்ஷிகன் 156 |
| அ.கௌதமன் 155 | ஆ.சிந்தூரி 155 | க.ருசித்திரா 155 | வி.கோபிகா 155 | ப.ஜீவலக்ஷி 154 | சி.விதுர்ஷன் 154 | ந.மதுராங்கனி 154 | ச.ஐங்கரன் 153 | வ.வனுஷா 153 | க.சாங்கவி 153 | சிவப்பிரியன் 152 |
| சி.கஜானன் 152 | சோ.கௌசிகன் 152 | வ.ஜானுசா 152 | த.பகலவன் 151 | இ.ரரஜ்காந் 151 | லோ.சஞ்ஜீவன் 151 | மா.டனுஜா 151 | சு.சர்மிலன் 150 | கோ.ஜெயசாளினி 150 | அ.குருலக்ஷ 150 | குனார்த்தனா 150 |
| ந.லோகிதா 148 | ர.யதுர்ஷன் 148 | சி.சமாஹிதன் 147 | ச.நிதர்சனா 147 | கு.எழினி 147 | கு.உமாசங்கர் 147 | ச.விதூஷன் 146 | ர.பிருதுவிராஜ் 146 | சி.வைதேகி 146 | ர.கம்சாயினி 145 | தனீசன் 144 |
| கே.கீர்த்தனா 144 | ம.கஜகிருஷ்ணா 143 | ச.ராகுலன் 143 | ஆ.யனூஷன் 142 | நா.கேசிகா 142 | ஜெ.சுவர்ணராஜி 142 | அ.சங்கீர்த்தனன் 141 | இ.சுஜந்தன் 141 | சி.சஷீவன் 141 | சு.செழியன் 141 | சங்கவன் 141 |

**நலன்புரி நிலையத்தில் இருந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்து எமது பாடசாலையில் இணைந்த மாணவர்கள்**

| | | |
|---|---|---|
| கு.உமையந்தி | ஞா.சிந்துஜன் | பு.தமிழினியன் |
| முள்ளியவளை தமிழ்க் கலவன் பாடசாலை | கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. | கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம். |
| 156 | 151 | 151 |

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி:021 222 2119

email: admin@hinduprimary.org

website: hinduprimary.org

இவர்கள் அனைவரும்
தரம் 1 தொடக்கம் தர
பாடுகளிலும் மிக நுணு
வித்திட்ட பாடசாலை
பாராட்டுக்களையும்
பாடசாலைக்கான வின
காணிக்கு 3 இலட்சத்
பேருவகையும் அடை
ற எமது பாடசாலை வ
வெற்றி வாகை சூடவு
வாங்கு வாழவும் வாழ்

# இந்துவின் ஆரம்பம் இனிய ஆரம்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கின்றோம்
# பாடசாலை

இன்று 5.12.2008 சனிக்கிழமை நடைபெறும் 2009 இற்கான பரிசளிப்பு விழாவில்

21 மாணவர்கள் தங்கப்பதக்கங்களையும் ஏனைய மாணவர்கள் பதக்கங்களையும் பரிசில்களையும் பெறுகின்றார்கள்



| | | | | | |
|---|---|---|---|---|---|
| வி.தனுஷா 174 | தே.துவாரகா 172 | இ.ஜயனீசன் 171 | கு.தர்மிகன் 169 | கே.யதுஷனன் 169 | வி.வத்சாங்கிதன் 169 |
| ச.நிரூஷன் 167 | சி.அபிராமி 167 | சி.சிவானுஜன் 167 | சு.பிரணவன் 166 | பி.சாங்கீர்த்தனன் 166 | பா.சாம்பவி 165 |
| ய.கௌரிசங்கர் 162 | றே.ஸ்ரெவின் டினோசன் 162 | பு.துஷாயினி 162 | ர.றோய் நிஷான் 161 | உ.பவித்திரா 161 | வி.அட்சகன் 160 |
| ச.துலக்ஷிகன் 156 | ஜெ.துலக்ஷிகா 156 | பி.பிரியதர்சனா 156 | சி.நிலக்ஷன் 155 | ம.சோபனன் 155 | இ.பவித்திரா 155 |
| ஆ.சிவப்பிரியன் 152 | இ.ஸ்ரீராம் 152 | ர.கஜானனன் 152 | பி.ஷந்தோஷ் 152 | ப.பவதர்சினி 152 | த.தர்மிகா 152 |
| கு.ஜனார்த்தனா 150 | ஜெ.கிரிதகணேசன் 149 | க.வர்த்தினி 149 | சி.சஜிதா 149 | ம.சுவேகா 149 | ச.யதுகுலன் 149 |
| சி.தனீசன் 144 | சி.சாங்கீர்த்தன் 144 | சு.துவாரகி 144 | நி.தேனுகா 144 | ஞா.அனோஜன் 144 | ம.நிருஷிகன் 144 |
| அ.சங்கவன் 141 | ச.பிரதீபன் 140 | ச.பிறேமலக்ஷன் 140 | த.பிரனீத்தா 140 | வி.பானுஜன் 140 | கே.தனராகவி 140 |

அனைவரும் சகல கலைகளும் பெற்றுக் கல்வியில் சிறப்புற வாழ்த்துவதோடு தாடக்கம் தரம் 5 வரை கல்விச் செயற்பாடுகளிலும் இணைப்பாடவிதான செயற் லும் மிக நுணுக்கமாகச் செயற்றிறனுடன் கருத்தூன்ற வைத்து உன்னத நிலைக்கு பாடசாலை ஆசிரியப் பெருந்தகைகளுக்கு நன்றி கலந்த கௌரவிப்புக்களையும் க்களையும் வழங்கி, இன்று பெருவிழா எடுத்துச் சிறப்பிப்பதையிட்டும், லைக்கான விளையாட்டு மைதானத்தை அமைக்கும் நோக்குடன் புதிதாக வாங்கும் 3 இலட்சத்தை இன்று பாடசாலைக்கு கையளிப்பதையிட்டும் பெருமையும் யும் அடைகின்றோம். கடந்த பல வருடங்களாகத் தொடர்ந்து முன்னிலை பெற் பாடசாலை வருங்காலத்திலும் பல முன்னேற்றகரமான சாதனைகளைப் படைத்து ாகை சூடவும் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள் நலமும் வளமும் பெருக வாழ் ாழவும் வாழ்த்துகின்றோம்.

**புலமைப் பரிசில் பரீட்சையில்**

**சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்கள்**

## கப்பல் அகதிகளை பலவந்தமாக இறக்க இந்தோனேஷிய கடற்படையினர் முயற்சி

கொழும்பு, டிச. 05

இந்தோனேஷியாவின் மொராக் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கப்பலிலுள்ள 250 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தங்களை அச்சுறுத்திக் கப்பலிலிருந்து இறக்கும் முயற்சியில் இந்தோனேஷிய கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர் எனக் குற்றம்சாட்டியுள்ளனர்.

இந்தோனேஷிய கடற்படையின் விசேட பிரிவைச் சேர்ந்தவர்கள் சுமார் 30 படகுகளில் தமது கப்பலைச் சுற்றிவளைத்த பின்னர் கப்பலுக்குள் ஏற முயன்றனர் என இலங்கை அகதிகள் தெரிவித்துள்ளனர்.

அதிகாலை 4 மணியளவில் கடற்படையைச் சேர்ந்தவர்கள் தமது கப்பலுக்குள் நுழைய முயன்றனர் எனக் கப்பலில் உள்ளவர்களின் சார்பில் கருத்துக் கூறியுள்ள அலெக்ஸ் தெரிவித்துள்ளார். பல படகுகள் தமது கப்பலைச் சுற்றி நின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

''இது ஓர் இராணுவ ஒத்திகையே. இது எமக்கு அச்சுறுத்தல் இல்லை'' என இந்தோனேஷிய அரசு தெரிவிக்கின்றது. எனினும் அவர்கள் பொய் சொல்கிறார்கள் என்று அலெக்ஸ் தெரிவித்துள்ளார்.

அவர்கள் எம்மை அச்சுறுத்த முனைகிறார்களா? மிரட்டி அடிபணிய வைக்கிறார்களா எனக் கேள்வி எழுப்பியுள்ள அவர், தாங்கள் கப்பலிலிருந்து இறங்கப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தோனேஷிய கடற்படை அந்த மக்களைக் கப்பலிலிருந்து வெளியேற்ற முயல்கிறது. அவர்களை அச்சுறுத்த முயல்கின்றது என அகதிகள் உரிமை அமைப் பொன்றும் குற்றம் சாட்டியுள்ளது.

கப்பலில் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டும் ஓசியானிக் வைகிங்கில் இருந்த இலங்கையர்களை நடத்தியது போன்று இவர்களையும் நடத்தவேண்டும் என்றும் அந்த அமைப்புக் கோரியுள்ளது. (சி)

## வர்த்தகரிடம் கப்பம் கோரியவர் கொழும்பு கிராண்ட்பாஸில் கைது

கொழும்பு, டிசெ. 05

கொழும்பு கிராண்பாஸ் பகுதி வர்த்தகர் ஒருவரிடம் கப்பம் கோரினார் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சந்தேக நபரிடமிருந்து கைவிலங்குகளும் போலி தொலைத் தொடர்பு கருவி ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சந்தேக நபர் குறிப்பிட்ட வர்த்தகரிடம் 60 ஆயிரம் கப்பம் கோரி இருந்தார் எனப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டு இருந்தது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்கும் தவராஜா தர்மிகா 2009 ஆம் ஆண்டு 5 ஆம்தர புலமைப் பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்தமையை பாராட்டுவதுடன் இவரின் கல்விக்கு ஊக்கமளித்த அதிபர் திரு.வே.ஞானகாந்தன் வகுப்பாசிரியர் திரு.வே.அன்பழகன் மற்றும் சக ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தி.தவராஜா,
இருபாலை கிழக்கு.

வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, அஜீபன் அண்ணா, சிந்து அக்கா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/நல்லூர் சென்.பெனடிக்ற் றோ.க.த.க. வித்தியாலயம்
# புலமைப்பரிசில் பரீட்சை பாராட்டு விழா - 2009



பாடசாலை மட்ட
முதல்நிலை
மாணவன்

ய.இன்பன்ற் ஷால்பன்
167 புள்ளி



ப.சங்கவி
163 புள்ளி



ப.அனோஜா
158 புள்ளி



அ.மதுமிதா
155 புள்ளி



ஜெ.மயூரிக்கா
148 புள்ளி



சி.கரணீதரன்
144 புள்ளி



ஜெ.கனுஷா
143 புள்ளி



இ.கம்சலா
143 புள்ளி



ம.நிலக்ஷிகா
142 புள்ளி



ப.பகிந்தன்
120 புள்ளி
(முல்லைத்தீவு)

**காலம்: 05.12.2009 சனிக்கிழமை.**

நேரம்: காலை 9.00 மணி

**பிரதம விருந்தினர்:**
லயன் Dr.V.தியாகராஜா MJF,J.P
(Vice Chairman, SLRCS, Jaffna district)

**சிறப்பு விருந்தினர்கள்:**
திரு.பூ.குகதாசன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆரம்பப்பிரிவு)
திரு.வ.குணசேகரம்
(முன்னாள் நல்லூர்க் கோட்டக் கல்வி அதிகாரி)

**கௌரவ விருந்தினர்:**
அருட்தந்தை F.L.N குரூஸ் அ.ம.தி
(பங்குத்தந்தை புனித சவேரியார் ஆலயம், திருநெல்வேலி)

## 100 புள்ளிக்கு மேல் பெற்று பெருமை சேர்க்கும் மாணவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. க.டனுசியா | 134 | 14.த.வர்ஷா | 120 |
| 2. இ.தர்சியப்பிரியன் | 134 | 15.அ.விதுஷா | 119 |
| 3.சூ.கிறிஸ்ரினா | 133 | 16.பே.உமைவாணன் | 114 |
| 4. ஹ.லோஜனா | 131 | 17.சி.சிவரதன் | 114 |
| 5.இ.செல்சியா | 131 | 18.நே.நிருஷா | 113 |
| 6.இ.தாரங்கன் | 129 | 19.வி.யதுர்சன் | 112 |
| 7.ந.சிந்துஜன் | 129 | 20. க.எப்சிபா | 112 |
| 8.அ.நர்மதா | 128 | 21. த.தக்ஷயன் | 110 |
| 9.த.சஞ்ஜீவன் | 128 | 22. ச.மைக்கன்றோ | 110 |
| 10.மோ.கோகிலராஜ் | 127 | 23. வி.ஏஞ்சல் | 109 |
| 11. இ.லக்சிகா | 124 | 24. சி.சந்தோஷிக்கா | 109 |
| 12. ம.அனுஸ்ரலா | 124 | 25.ந.நர்மதா | 109 |
| 13. அ.வினுஷா | 120 | 26.நி.திலக்ஷன் | 108 |
| | | 27.ப.மேரிதிரேசா | 106 |
| | | 28. சி.சக்திதரன் | 105 |



**எமது வித்தியாலய அதிபர்**
*அருட்சகோதரி மரியமலர் யோசவ்*

ஆற்றலுயர் கல்விதனை ஏற்றமுடன் வழங்கி
அறிவார்ந்த மாணவர்கள் தனையென்று முருவாக்கும்
பேர்பரவும் சென்.பெனடிக்ற் கல்லூரிச் சமூகத்தை
பெற்றோர்கள் வாழ்த்துகின்றோம் -
பேறுடனே வாழியவே.

*எமது மாணவச் செல்வங்களை
வழிப்படுத்தி அவர்களின் வெற்றிக்கு
வித்திட்ட எம் பாடசாலையின்
அதிபர்,ஆசிரியர்கள்*
**திருமதி விமலன் ஜெயபாரதி, செல்வி
ஜேசுதாஸ் றொனிட்டா ஆகியோரை**
*மனமாறப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.


உலகம் இப்போது உங்கள் கைகளில்
இனிக் கொழும்பு செல்லும் தேவையில்லை.......

அறிமுகமாகியுள்ள
பல புதிய தேர்வுகளுடன்
சர்வதேசத் தரம்வாய்ந்த
ICDL Online பரீட்சைகள்
உங்களுக்காகவே
யாழ்ப்பாணத்திலும்.......



ICDL
e-TYPE
ICDL Advanced
e-Citizen
ICDL CAD
ICDL WebStarter
ICDL ImageMaker

தொடர்புகளுக்கு :

GATEWAY LANGUAGE AND ICT CENTRE,JAFFNA

347, Kasthuriyar Road,
Jaffna.
Tel : 021 567 5555

347, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 567 5555


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# English Language - II

**31-T-II**

Test - 09


Complete the following sentences using the words given in brackets to form a word that fits the blank space. The first one is done for you.

1) Students are always (faith) faithful to the elders and teachers.
2) Her (decide) ............................ to retire surprised us all, in office.
3) I'm looking for an (appoint)................................ with the director.
4) Teacher encourages (create) ........................... writing among the children.
5) The company provides (employ) ........................ to women only.
6) The police have been keeping a clock watch on the suspect's (move) ................................

Test - 10

Study the Pie -chart and answer the questions.

There are 40 students in Grade 11 A. The Pie- chart tells you about their favourite food.




1) What is the most preferred breakfast?
.......................................................................................
2) What is the least preferred break - fast?
.......................................................................................
3) What are the equally preferred break - fasts?
.......................................................................................
4) Nearly how many students like pittu?
.......................................................................................
5) How many students prefer bread?
.......................................................................................

Test - 11

Write a paragraph about Bermuda based or the instructions given below.

**BERMUDA**

Location: Western North Atlantic Group of 300 Coral Islands.

| | | | |
|---|---|---|---|
| 1. | Area | - | 53.3 sq.K.M |
| 2. | Population | - | 58080 |
| 3. | Language | - | English |
| 4. | Literacy rate | - | 90% |
| 5. | Religion | - | Christianity |
| 6. | Currency | - | Bermuda Dollar |

.......................................................................................
.......................................................................................
.......................................................................................
.......................................................................................
.......................................................................................
.......................................................................................

Test - 12

Write a short letter to your friend in Colombo, describing the " English Day" of your school. Use about 100 words.

Include the following:

The day and date of the celebration.
The name of the chief - guest.
How the events were worked out.
Your participation.

.......................................................................................
.......................................................................................
.......................................................................................
.......................................................................................
.......................................................................................
.......................................................................................
.......................................................................................
.......................................................................................

.......................................................................................
.......................................................................................
.......................................................................................

Test - 13

Read the following text and underline the word that best fits the blank.

Sunil and Nirmal were the 1) .............................. (good/better/ best) of friends. Both of them 2) .............................. (went/going/ goes) to the same school. 3) .......................... (they/them/their) were always together. One day they 4) ......................... ( has/had/have) a fight in class. It was over 5) ........................ (a/an/the) eraser. "This 6)............. (are/is/were) mine", said Sunil laying his hands 7) .......... (in/on/at) a green eraser on the desk. "No, 8) .......................... (they/ these/it) is mine" said Nimal. The teacher 9) ......................... (hear/ heard/hearing) the loud talk. He called them to his table 10).............. (as/and/or) said " Good friends never fight"

Test - 14.

Match the following questions with the answers given below indicating the correct letter of the answer in the box opposite each question.

1) Where are you from? ☐
2) How old are you? ☐
3) When did you get through G.C.E.(O/L) Exam? ☐
4) What subjects have you got through at A/L Exam? ☐
5) Will you accept this appointment at short notice? ☐
6) What do you do during your leisure? ☐

A. Yes, definitely.
B. Read a lot and do gardening.
C. I' m from Trincomalee.
D. Economics, Tamil and Logic.
E. I'm twenty five now.
F. in August 2003.

Test - 15.

Read the text, there is one incorrect word in each line. Underline the mistake and write the correct word in the space given. The first one is done for you.

The Black's family went to a hotel and stay for a month - stayed
Mrs. Black did not like swimming ..............................
But she walk up and down on the sands ..............................
Rosy looks every were for shells ..............................
She dug holes of a little spade in the sand ..............................
One day, when the sun is shining they went out in a boat ..............................
Mary jumped at the water ..............................
Some people shout for help ..............................
Others was laughing ..............................
Her brother get hold of her ..............................
He lifted, she into the boat ..............................

Test - 16.

Write on one of the following. Use about 200 words.

a) Newspapers in Sri Lanka.

OR

b) The shramadana work of ours.

OR

c) Science and Modern Technology.

.......................................................................................
.......................................................................................
.......................................................................................
.......................................................................................
.......................................................................................
.......................................................................................
.......................................................................................
.......................................................................................

- End -

கல்விச்சுடர் தொடர்பான விமர்சனங்களுக்கும் தொடர்புகளுக்கும்....
ஆசிரியர், உதயன்-கல்விச்சுடர்,
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-2223837
பக்ஸ்: 021-2229944, மின்னஞ்சல்:newkalvisudar@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.5.

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் 2009 - 2010 ஆம் கல்வியாண்டுக்கான முயற்சியாண்மையும் சிறு வணிக முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கை நெறி இறுதிப் பரீட்சை இன்று சனிக்கிழமை தொடக்கம் யாழ் . பிராந்திய நிலையத்தில் நடைபெறுமென இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ)

# Jaffna College

Cordially Invites you & your Friends to its

**Christmas Carol Service**

**"A Mega Story"**

on

Sunday 6th December, 2009

At 3.30 pm.

At

The Cathedral, Vaddukoddai.

(c/562926) **Principal.**

மட்டுவில் தெற்கு

வளர்மதி சனசமூக நிலைய ஸ்தாபகர்

அமரர் பொன். நாகமணி அவர்களின்

## 13ஆம் ஆண்டு நினைவலைகள்

பூமிக்காய் 16.07.1936



விண்ணுக்காய் 05.12.1996

**அமரர் பொன். நாகமணி அவர்கள்**

தேன்குளத்தில் மலர்ந்த தேசமிகு வெண்டாமரையே
தேவர் உலகத்தில் உம் முகவரியைத் தாருமையா
பேதமின்றி வரைந்து விட்ட வளர்மதியில் - நின்று
பேசுகின்றோம் நின் பேசற்கரிய நற்செயலை!

பதின்மூன்று ஆண்டுகள் முன் இவ்வுலகில் வாழ்ந்த நாளில் -நீர்
ஈன்று விட்ட பெண்ணவள் இன்னும் இளமை குன்றவில்லை
உலகத்தின் கண்களுக்கு உருவத்தை மறைத்துவிட்டு
உள்ளத்தில் உயர்ந்துவிட்ட உணர்வைத் தீட்டினீர்

மாண்புகழ் படைத்த மானிடனே தென்றல் தரும் - நின்
மங்கல வாழ்த்தொலிகள் எம்செவியில் இனிக்கிறது
தூயஉள்ளத்தோடு தூமதியாய் ஒளிர்பவனே
தேசவிடுதலைக் காற்றோடு உன்னைச் சுவாசிக்கின்றோம்.

(92839)

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

நிர்வாகம்,
வளர்மதி சனசமூக நிலையம்.

## நினைவு தினம் நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.5

அமரர் வி.வீரசிங்கத்தின் 45ஆவது நினைவு தினம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் கலந்துகொள்வார்.

நினைவுப் பேருரையை யாழ்.பல்கலைக் கழகப் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் நிகழ்த்தவுள்ளார். (50-204)

## முன்பள்ளிச் சிறார்களின் கலைவிழா

யாழ்ப்பாணம், டிசெ.5

உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களின் கலை விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சனசமூக நிலைய றமணன் அரங்கில் நடைபெறவுள்ளது.

ச.ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமாரும், சிறப்பு விருந்தினராக உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய இளைப்பாறிய அதிபர் கவிமணி க.ஆனந்தராசாவும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் இந்தாண்டு மேற்படி முன்பள்ளியில் கல்வி பயின்று 2010 ஆம் ஆண்டு பாடசாலை செல்லும் சிறார்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து கலைநிகழ்வுகளும் நடைபெறும். (50-201)

## கொமர்ஷல் வங்கிக் கிளையில் கைவிடப்பட்ட சைக்கிள்கள்

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி கொமர்ஷல் வங்கிக் கிளையில் கைவிடப்பட்ட நிலையில் 5 துவிச்சக்கரவண்டிகள் காணப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி துவிச்சக்கரவண்டிகளை உரியவர்கள் தகுந்த அத்தாட்சியைச்சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளுமாறு மேற்படி வங்கியின் முகாமையாளர் எம்.ஏ.குபேரகுலேந்திரன் அறிவித்துள்ளார்.

கைவிடப்பட்ட நிலையில் பெண்களுக்கான துவிச்சக்கரவண்டிகள் நான்கும் ஆண்களுக்கானது ஒன்றும் உள்ளதாகவும் மேற்படி துவிச்சக்கரவண்டிகள் வங்கியின் பாதுகாப்பு உத்தியோகத்தர் வசம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (50-111)

## நகரப் பகுதி மீன் சந்தைகளில் கடலுணவுகளின் விலைகளில் சரிவு

யாழ்ப்பாணம், டிசெ.5

யாழ்.நகரப் பகுதியில் உள்ள மீன்சந்தைகளில் கடலுணவுகளின் விலைகள் திடீரென வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றன.

கொட்டடி, குருநகர், பாஷையூர் மீன் சந்தைகளில் மீன் மற்றும் கணவாய் ஆகியவற்றின் விலைகள் திடீரெனக் குறைவடைந்துள்ளன. ஒட்டி, ஓரா, திரளி போன்ற மீன்கள் ஒரு கிலோ 200 ரூபாவாகவும் கணவாய் ஒருகிலோ 250 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

தீவுப் பகுதியில் இருந்து பெருந்தொகையான மீன்கள் கொட்டடி மீன் சந்தைக்கு வந்து சேர்வதாலேயே மீன் விலை குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (50-224)


MIS ICT ICT ICT ICT
Computer Center # 74, சுபாதி வீதி நல்லூர் யாழ்ப்பாணம் TPNO: 021 321 6083, 0776577359

Grade 10
05.12.2009 at 11.30 am - Tamil Medium
06.12.2009 at 11.30 am - English Medium
புதிவுகளை இன்றிலிருந்து மேற்கொள்ளவும்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
ஒரு பிரிவில் 15 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்

Grade 11
02.12.2009 at 5.00 pm - Tamil Medium
03.12.2009 at 6.00 am - Tamil Medium
04.12.2009 at 3 pm / 4 pm- English Medium

For Grade 10 / 11

மாணவர்களுக்குத் தனித்தனியான வசதியான நேரங்கள் By R.Kumaran - B.Sc.


நீங்காத நினைவுகளுடன்

## 4ஆவது ஆண்டு நினைவாராதனையும் 23ஆவது பிறந்த நாள் நினைவலைகளும்

உதயம் 01 . 02 . 1986



அஸ்தமனம் 05 . 12 . 2005

## அமரர் விஜேந்திரன் பிரதீபன்

(யா/மத்திய கல்லூரி, உயர்தர வகுப்பு மாணவன்)

முகத்தில் முத்தான சிரிப்புடன்
சிட்டுக் குருவியாய் சிறகடித்தவனே!
பூக்கும் பருவத்தில் பூச் சொரியும் வேளையில்
காய்க்கும் பருவத்தில் கண்ணிகட்டும் வேளையில்
பாயில் படுக்காமல் பாலமுதம் உண்ணாமல்
மாயமாய் நீ மறைய விதியென்று சதி செய்தனரோ
விழி மூடியபின்பும் விழித்திரையில்
உன் விம்பம் வலிதாங்க முடியவில்லை.

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வவுனியா. (சி/562680) அன்ரி.

## 45 ஆம் நாள் நினைவு அஞ்சலி

மண்ணில் 19 . 06 . 1954

விண்ணில் 20 . 10 . 2009



அமரர்

## அப்பையா தர்மரட்ணம் (கார்ச்சாரதி)

திதி: திருதியை

கடமை கண்ணியம் கட்டுப்பாடு கருமமே கண் என்றும்;
கருத்துடை மகனே அப்பையா குடும்பக் குல மகனாகி,
கடல் கடந்து காசு பணம் உழைத்து சண்முகம் குடும்ப நல் மருமகனுமாகி,
கணவனே தெய்வமென நினையும் கௌரியின் அரிய துணைவனுமாகி
கனியென நன்கல மக்களைப் பெற்ற பெருமையனுமாகி
கனவிலும் மறவாத "கார்" வாகன உயிரவன் நானெனவுமாகி
கற்றவர் விரும்பும் கற்பகனாகி மற்றவர்க்குதவும் உறவுமே ஆகி
கல்வியும் செல்வமும் வீரமும் கருத்தெனக் கூறிடும் குருவருளாகி
கவின் பெற வாழ்ந்த தர்மரட்ணா! தர்சன, தார்மீக, தயாள, பிறேமினி
கற்றாவினைப் பிரிந்த கன்றது போல குலமெலாம் புழுங்கிடச் செய்தாய்
கன்றிய மனம் வந்த காரணம் எதுவோ? கனவிலும் கொடுமை
நினையா மன்னனே!
கடுகியே எடுத்த முடிவு இது என்ன? காலனின் பணிப்போ நீதானறிவாய்
கலங்கிடும் குலமாய்க் காலம் முழுமையும் கரைந்தே போவது முடிவே ஆனது
கரை காட்டும் கலங்கரை விளக்கே! கானகத்துக் காதலியைக்
கைவிட்டான் நளன்,
கலி தொடர்ந்தோ நீயுமிங்கு காரிருளில் காருடனே யாவரையும் விட்டாய்
கடுகி வழி நடந்து விட்டாய் கரை காணாக் கப்பலாய் அலமாத்தோம் நாமிங்கு
கருதி வளர்த்தீர்கள் காப்பகமாய் நின்றீர்கள் உருகிஉளம் நலிகின்றோம்
கடவுளர் இருந்து காட்டுங்கோ நல்வழிகள் எனக் கை கூப்புகின்றோம்
கனவும் நனவும் இன்றைய நாற்பத்தைந்தாம் நாள் நினைவே
கதிரவன் வரவும் போக்குமென இந்நிலவுலகில் நிறையும் எம் நெஞ்சில்.

"சோமராந் தோட்டம்",
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(92727)

அஞ்சலிக்கும்:
குடும்பத்தினர்.


யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Post Graduate Diploma in Management (Pre.MBA)
(MBA final (Topup) in UK / London) காலம் 9 மாதங்கள்
To Whom :பட்டதாரிகள், (BA,Bsc) வியாபார பட்டதாரிகள் அந்தஸ்து அற்றவர்கள் உயர்தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் (HNDM, HNDA)

Diploma in English 100 % வெற்றி
100 % பயிற்சி Advanced Diploma in English
காலம் 6 மாதங்கள்
மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது
ஒரு நிறுவனத்தைச் சேர்ந்த / தனிப்பட்ட குழு உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட (Special) முறையில் வகுப்புகள் ஒழுங்கு படுத்தித் தரப்படும். அத்துடன் நல்ல கட்டணக் கழிவும் தரப்படும்.

Foundation Diploma In Hospitality Management (Topup degree in UK / London)
காலம் 6 மாதங்கள்
Hotel Management
இவ் 6 மாதக் கற்கை நெறியினை முடித்தவர்கள் அவர்களின் 2 வருடப் (Degree) பட்டப்படிப்பை லண்டனில் (London - UK) கற்கமுடியும்.
கல்வித்தகைமை: G.C.E (O/L) பயின்றிருந்தால் போதுமானது. மேலதிகவிபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

Access Programming
(Foundation Degree Programme)
காலம் 6 மாதங்கள்
O/L முடித்த மாணவர்கள் அல்லது A/L லில் நல்லபெறுபேறுகள் அல்லாதவர்களும் இப்பாட நெறியினைப் பூர்த்தி செய்து Higher National Diploma & Degree போன்ற கற்கை நெறிகளைக் கற்று, Bsc, BBA,MBA பட்டதாரி ஆக முடியும்.

அதிக வருவாய் நல்ல வேலைவாய்ப்பு
Foundation Diploma In Nursing (Health & Social Care)
Topup degree In UK / London
காலம் 6 மாதங்கள்
கல்வித் தகைமை (G.C.E (O/L) பயின்றிருத்தல் போதுமானது
மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

மாணவர்களுக்கு 100 % Student Visa பெற்றுக்கொள்வதற்கு அனுபவம் வாய்ந்தஎமது சட்டத்தரணிகளால் உத்தரவாதம் அளிக்கப்படும். விபரங்களை அறியவும், அறிவுரைகளுக்கும் காலதாமதம் செய்யாது இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்

Foundation Diploma In Management காலம் 6 மாதங்கள்
(For BBA Degree Programme) Minimum Requirement : G.C.E. (O/L)
இப்பாட நெறியின் 2 வருடப் பட்டப்படிப்பை நீங்கள் லண்டனில் பூர்த்திசெய்து BBA பட்டதாரி ஆகலாம்.
தனிப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் Management துறையிலே தங்களின் அறிவை மேம்படுத்திக் கொள்வதற்காகவும் இப்பாட நெறியில் இணையலாம்.

Second Floor,
No.15, Sirampiyadi Lane
(Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்)
(கொசி Hotel மேலே)
Tel: 021 2224550 Email: info@bchs.lk
HotLines: 0773501499


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறு பேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனை புரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களது கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்த உள்ளான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## சிவானந்தன் ரகுவரன்

*நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்*
உயிரியல் பிரிவு-2ஏபி,
மாவட்ட நிலை-1

''திட்டமிட்டு செயற்பட்டால் வெற்றி நிச்சயம்''

நான் இத்தகைய பெறுபேற்றினைப் பெற்றது எனக்கும் பெற்றோருக்கும் மிக்க மகிழ்ச்சியை அளிக்கின்றது. இதற்குக் காரணம் இறையாசியும் பெற்றோர் தந்த ஊக்கமும் பாடசாலை சமூகத்தின் ஆதரவுமே. நான் தரம் 6 இலிருந்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று வந்தேன். சிறு வயதில் இருந்தே பாடங்களில் ஆர்வம் இருந்தது. அதனால் விஞ்ஞானத்தில் அதிக புள்ளிகளைப் பெற்றேன். ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் 10 ஏ பெற்று சித்திபெற்றேன். அம்மாவின் விருப்பத்திற்கமைய நான் உயர்தரத்தில் உயிரியல் பிரிவைத் தேர்ந்தெடுத்தேன். பாடசாலைக்கு நல்ல பெயர் ஒன்றைச் சேர்க்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் இயன்றளவு முயன்று படித்தேன். இன்று இந்த நிலையை அடைந்திருக்கி றேன்.

பாடசாலையில் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பங்குபற்றினால் பரீட்சையில் பின்னடைவு ஏற்படும் எனும் மூடநம்பிக்கை இன்று பெற்றோர் மத்தியில் நிலவுகின்றது. அது உண்மையில்லை. நான் பாடசாலையில் சிரேஷ்ட மாணவத் தலைவனாக இருந்துள்ளேன். எனவே மாணவர்கள் பாடசாலை பாடவிதான, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஆர்வம் செலுத்தினால் வெற்றி நிச்சயம்.

என் வெற்றிக்காக உழைத்த பாடசாலைச் சமூகம், கற்பித்த ஆசிரியர்கள் அனைவருக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் எனக்கு உறுதுணையாக நின்ற சமுர்த்தி வங்கியினருக்கும் நன்றிகள். குறிப்பாக உதயன் பத்திரிகையில் வெளிவந்த கல்விச்சுடர், வினாத்தாள்கள் என் வெற்றிக்கு பெரிதும் கைகொடுத்தன.

எனது வெற்றிக்குக் கைகொடுத்த உதயன் நிறுவனத் திற்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் வெற்றிக்காக உழைத்த அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள்.

*செவ்வி : ஹரிஸ், அனுஷ்மன், ஞானஆதவன், குமரஸ்ரீ.*



## பிரியதர்சினி தருமநாதன்

*யாழ். இந்து மகளிர் கல்லூரி*
கலைப் பிரிவு- 2ஏபி
மாவட்டநிலை - 25

நான் தரம் 1 முதல் 4 வரை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலும் தரம் 5 இனை இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையிலும் தரம் 6 முதல் 13 வரை இந்து மகளிர் கல்லூரியிலும் கல்விகற்றேன். எனது அப்பா நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தராகவும் அம்மா ஆசிரியையாகவும் இருந்த போதிலும் எனது இப்பெறுபேற்றுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து உதவி புரிந்தார்கள். எனது சகோதரர்களும் ஆரம்பத்திலிருந்து மிகவும் உதவிபுரிந்தார்கள். கொழும்பில் இருக்கும் எனது அத்தை வினாத்தாள்கள் பலவற்றையும் எனக்கு அனுப்பி வந்தார். அதிலும் குறிப்பாக எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் இறுதிவரை எமக்குப் பல்வேறு வகைகளில் ஊக்கத்துடன் உதவிகள் பல புரிந்து வந்தனர். அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றிகளைக் கூறிக்கொள்வதில் பெருமையடைகிறேன்.

உயர்தர வகுப்பிற்குச் செல்லும் போது மிகவும் முக்கியமானது நாம் தெரிவு செய்யும் பாடத்தெரிவுகளே. அந்தவகையில் எமக்கு அறிவுரை வழங்கி தமிழ், பொருளியல், கணிதம் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்யக் காரணமாக இருந்த எமது ஆசிரியருக்கு நன்றிகள்.

உயர்தரத்தில் கலைப்பிரிவு மாணவர்கள் கணிதபாடம் மீது ஈடுபாடு கொள்வதனாலும் அத்தோடு ஏனைய இரு பாடங்களையும் முழுமையாகப் பயில்வதனாலும் உயர் பெறுபேற்றினைப் பெற்று பல்கலைக்கழகம் செல்லலாம் என எமக்கு உணர்த்தி, எம்மை வெற்றிபெற வைத்த ஆசிரியைகளுக்கு எனது உளமார்ந்த நன்றிகள். உயர்தர வகுப்பில் படிக்கும் நேரம் சிறிதளவு எனினும் கற்ற விடயங்களை நாள்தோறும் முழுமையாக, துரிதமாக மீட்டுப்பார்க்க வேண்டும். அன்றாடம் கற்ற விடயங்களை உடனுக்குடன் கற்றல் வேண்டும் என்பதே தற்போது கல்விகற்கும் மாணவர்களுக்கு நான் முன் வைக்கும் அன்பான வேண்டுகோளாகும்.

எனது பெற்றோரின் ஆதரவும், எனது நண்பர்களின் ஆதரவும், இறுதிவரை இருந்தமையே எனது பெறுபேற்றிற்கு மிகவும் சாதகமாக அமைந்தது. பஞ்சபூதங்களைப் போல எனது ஆருயிர் நண்பிகள் நால்வரும் நானும் இறுதிவரை கூட்டுக் கல் வியைக் கற்றுவந்தோம். அதனால் நான் இந்த இலக்கை அடைய இலகுவாக இருந்தது. எதிர்வரும் காலத்தில் உயர்தரத்தில் கலைப்பிரிவு மாணவர்கள் கணிதத்தினை ஒரு பாடமாகக் கற்பதன் மூலம் உயர்ந்த பெறுபேற்றினை அடையலாம் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்.



## அருண்யா சிவராசா

*வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி*
கலைப்பிரிவு - 3ஏ,
மாவட்ட நிலை - 99

நான் ஆரம்பக்கல்வியை நெல்லியடி மெதடிஸ் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் இடைநிலைக்கல்வியையும் உயர் கல்வியையும் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி யிலும் கற்றேன்.

உயர்தரக் கல்விக்காக கலைத்துறையைத் தெரிவுசெய்த நான், தமிழ், அளவையியல், வணிகப்புள்ளிவிபரவியல் போன்ற பாடங்களை எனது தெரிவுகளாக்கிக் கொண்டேன். ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் 3 ஏ என்ற சிறப்புச் சித்தியைப் பெறுவேன் என்று நான் முழுமையாக நம்பினேன். எனது நம்பிக்கை வீண்போகாமல் பரீட்சைப் பெறுபேறுகளும் எனக்குச் சாதகமாகவே அமைந்தன.

பாடசாலையிலும் தனியார் கல்வி நிலையங்களிலும் கற்பிக்கும் போது அவற்றைக் கிரகித்து மனனம் செய்து கொள்வேன். தினசரி மீட்டல் செய்து சந்தேகங்களை ஆசிரியர்களுடன் கலந்துரையாடித் தெளிவுபடுத்துவேன். ஒவ்வொரு அலகு முடிவின் போதும் அவற்றிற்கான கடந்தகால வினாக்களைச் செய்து சரிபார்த்துக் கொள்வதுடன் பரீட்சை நெருங்கிய காலங்களில் கடந்தகால வினாத்தாள்களை முழுமையாகச் செய்வேன். எனது இம்முயற்சியே பரீட்சை பற்றிய மனப்பயத்திலிருந்து என்னை விடுவித்தது.

அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், உறவினர் போன்றோர் எனது கல்வியில் காட்டிய அக்கறையினால் நானும் முழுமையாக கல்வியில் ஈடுபட்டு அவர்களின் விருப்பம் போல 3 ஏ சிறப்புச் சித்தியையும் பெற்றேன்.

எனது கல்வியின் முன்னேற்றத்திற்கு ஆசிரியர்களின் ஊக்குவிப்பு, வழிகாட்டல்கள் என்பவற்றுடன் விடாமுயற்சி, தன்னம்பிக்கை,பயிற்சி போன்றனவும் இன்றியமையாதவை. இவையே எனது வெற்றிக்குக் காரணமாக அமைந்தன. எனது வெற்றிக்கு வழிசமைத்த ஆரம்பக் கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்கல்வி போதித்த ஆசிரியர்கள் அனைவருக்கும், நான் கல்வி கற்ற பாடசாலை அதிபர்களுக்கும், குறிப்பாக உயர்கல்வி கற்கும் போது எனது சந்தேகங்களைத் தீர்த்த எமது பாடத்துறை ஆசிரியர்களுக்கும்,தனியார் கல்வி நிலையத்தில் கற்பித்த ஆசிரியர்களுக்கும் எனது பெற்றோருக்கும் எனது வாழ்க்கைக்கு தூணாக இருந்த எனது அம்மாவிற்கும் உடன்பிறப்புக்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இறைவனின் ஆசியுடன் எனது இலக்கை அடையத் தொடர்ந்தும் முயற்சி செய்வேன்.



## சந்திரன் பார்த்தீபன்

*புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி*
உயிரியல் பிரிவு- ஏ2பி
மாவட்டநிலை - 16

பாடசாலை மீது அதிக நம்பிக்கை வைத்து ஒழுங்காக அங்கு சென்று கற்றல் செயற்பாட்டை மேற்கொண்டமையே எனது சிறந்த பெறுபேற்றிற்கான காரணம்.

எனது தந்தையார் ஒரு விவசாயி. தாய் வீட்டுப்பணியை மேற்கொள்கிறார். எனக்கு ஒரு தம்பி, தங்கை உள்ளனர். எங்கள் குடும்பத்தைத் தலைநிமிரச் செய்ய வேண்டும் என்ற உள்ளார்ந்த ஆர்வம் என்னுள் நீண்டகாலமாக வேரூன்றி இருக்கிறது.

இதற்குக் கருவியாகக் கல்வியையே பயன்படுத்த முடியும் எனத் திடமாக நம்பினேன்: நம்புகிறேன்.

பலாலியைச் சொந்த இடமாகக் கொண்ட எமது குடும்பம் நாட்டுச் சூழ்நிலைகள் காரணமாக இடம்பெயர்ந்து வசிக்க வேண்டி நேரிட்டது. எனது ஆரம்பக் கல்வி முதல் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியிலேயே படித்து வருகிறேன்.

பிரபல பாடசாலை, பிரபலமற்ற பாடசாலை என்று எதுவுமே இல்லை. படிக்கும் மாணவர்களாகிய எமது ஆர்வத்திலேயே அடைவு தங்கியிருக்கிறது. பாடசாலையில் உயிரியல் பிரிவில் கல்வி கற்பித்த பௌதிகவியல் ஆசிரியை துசிதா சிவயோகன், இரசாயனவியல் ஆசிரியை வரதலக்சுமி ஸ்ரீ வடிவேல், உயிரியல் ஆசிரியை கமலாவதி சுரேஸ் ஆகியோர் எனக்கு உறுதுணையாகப் பாடங்களைப் போதித்தனர். தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களும் வழிகாட்டினர்.

எமது பாடசாலையில் உயிரியல் துறையை நாடுவோருடைய எண்ணிக்கை மிகவும் அரிதானது. இரு வருடங்களிற்கு முன்னர் இ.கோகுல்நாத் மருத்துவத் துறைக்குத் தெரிவாகியிருந்தார். அவர் தந்த நம்பிக்கை என்னை உயிரியல் பிரிவுக் கல்வியில் நாட்டம் கொள்ளச் செய்தது.

இரவு நேரங்களில் 10 மணிவரை படிப்பேன். அதிகாலை 4 மணிக்கு எழும்பிப் படிப்பேன். கற்றலுக்காக பகல்நேரத்தையே அதிகம் பயன்படுத்தினேன்.

எங்கள் வீட்டில் தொலைக்காட்சி போன்ற பொழுது போக்கு சாதனங்கள் எதுவும் இல்லை. கற்றலுக்கு இடையூறு தரும் காரணிகள் பல எங்களிடம் இல்லாமல் இருந்தது ஒரு வகையில் அதிஷ்டம் என்றே கருதுகிறேன்.

தினமும் இறைவழிபாட்டிற்காகவும் ஒரு நேரம் ஒதுக்கிச் செயற்படுவேன். உண்மையில் 16 ஆவது நிலை கிடைக்கும் என நான் எதிர்பார்த்திருக்கவில்லை. தெய்வ கருணையினால் கிடைத்த பெறுபேறு என்று கருதுகிறேன்.

# புத்தக சாலை




## சதாபிஷேகம் மற்றும் திருமணப் பொன் விழாமலர்

பரோபகாரமணி, சிவநெறிக் காவலர் கே.கே.சுப்பிரமணியம், திருமதி சரஸ்வதி தம்பதிகளின் ''சதாபிஷேகம் மற்றும் திருமணப் பொன்விழா மலர்'' வெளிவந்துள்ளது.

காரைநகரைச் சொந்த இடமாகக் கொண்ட மேற்படி தம்பதியினர் தம்வாழ்வில் செயற்கரிய சைவப்பணிகள் பல செய்து ஞானியர்கள், தபஸ்விகள்,சான்றோர்களின் ஆசிகள் பெற்றவர்கள்.

வையத்தில் வாழ்வாங்கு வாழ்கின்ற அத் தம்பதியினரின் சிறப்பம்சங்களையும், வரலாற்றுக் குறிப்புகளையும் தன்னகத்தே கொண்டு இந்நூல் வெளிவந்துள்ளது.

# மக்கள் முகம் மக்கள் முகம்



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்த ப.ஈஸ்வரநாதன் தனது ஆசிரிய சேவையிலிருந்து 3.12.2009 அன்று முதல் ஓய்வுபெற்றுள்ளார்.

வடமராட்சி மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்தும் முகமாக பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்ற இவர், தனது 24 வருட கால கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.



தேசிய மரபுரிமைகள் அமைச்சினால் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட 'சிறுவர்களுக்கான தேசிய மரபுரிமை-2009' கவிதைப் போட்டியில் வதிரி திரு இருதயக் கல்லூரியின் பிரதி அதிபர் அ.ம.ஜெபரத்தினம் எழுதிய கவிதை முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

''தேசிய மரபுரிமையைத் தேடி அலையும் சிறுவர் நாம்'' என்னும் தலைப்பில் இவர் எழுதிய கவிதையே முதலிடம் பெற் றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விற்பனைக்கு**

300-XXXX தொடரிலக்கமுடைய NISSAN SUNNY கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0777286003



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன் 2ஆம் தரக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம் II (SEMP) இனால் நடத்தப்பட்ட கணனி மென்பொருள் ஊடான கற்கைநெறி விருத்திப் போட்டியில் வடமாகாணத்தில் 2ஆவது இடத்தைப் பெற்ற

திரு. செ. காலக்கண்ணன் (MA)

(ஆசிரியர் கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயம்)

நதியின் அமைதி கரைகளை அழகுபடுத்தும்
மொழியின் இறுக்கம் சொல்லை வளப்படுத்தும்
மௌனத்தின் ஆழத்தில் கல்வியை சிறப்புப்படுத்துபவனே
வாழ்க! வளமுடன் மென்மேலும் பட்டம் பெற்று.

வாழ்த்தும்
ஆசிரிய நண்பர்கள், மாணவர்கள்

(92660)


## மலர் வெளியீடும் பெற்றோர் தின விழாவும்

வேலணை, டிசெ. 5

யாழ். சோமசுந்தரம் பாலர் பாடசாலை யின் வெள்ளிவிழா மலர் வெளியீடும், பெற்றோர் தினவிழாவும் இன்று சனிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் பாடசாலை அதிபர் திருமதி ச.வொட்சன் ரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் வாழ்த்துரைகளை யாழ். வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. மீரா அருள்நேசன், யாழ். பரியோவான் கல்லூரி ஆசிரியர் கே.எஸ். முகுந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

நூலின் முதற் பிரதியை யாழ். சிறி நதியா நகைமாட உரிமையாளர் எஸ். சத்தியரூபன் பெறவுள்ளார்.

(50-204-167)

## கலைவிழா

யாழ்ப்பாணம், டிசெ. 5

'எவர் சைன்' சிறுவர் உலகம் நிறுவனத்தினரின் நான்காவது கலைவிழா நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை 8.30 மணியளவில் யாழ்.இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி மா. வேதநாதன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் கோட்டக்கல்விக் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா, யாழ். இந்துக்கல்லூரி அதிபர் வீ.கணேசராஜா, யாழ். இந்துக்கல்லூரி பிரதி அதிபர் பொ. சிறிஸ்கந்தராஜா ஆகியோரும் கலந்து கொள்வர்.

## 'உயிர்த்திடும் உறவுகள்' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், டிசெ.5

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உளவளப் பயிற்சி ஆசிரியர் த. உதயராஜனின் விசேட கல்வி மாணவருக்கான 'உயிர்த்திடும் உறவுகள்' பாடல் இறுவெட்டு வெளியீட்டு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை மு.ப. 10.30 மணிக்கு யாழ். முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் சுப்பிரமணிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய அதிபர் தி. சத்தியபாலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்து கொள்வார். (50-16)


## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 796 திகதி: 03.12.2009

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல. |
|---|---|---|---|---|---|
| D | 12 | 32 | 36 | 38 | 31 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 14,251,222.00 | 01 |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 2,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 05 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 310 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 15064 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 211691 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 23,111,442.00

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை 10,000,000.00

ஐந்து லெட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை 234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360, 2433631 இணையம்: www.nlb.lk


## பதினோராண்டுகள் நீங்காத நினைவுகளில்..



எங்கள் குடும்பத்தின் முத்தான மூத்த செல்வமே!
எம்மைவிட்டுப் பிரிந்து சென்று
பதினோராண்டுகள் பறந்து சென்றதுவோ
புகழ் பூத்த உன்முகம் காண - இன்னமும்
ஏங்குகின்றோம் எங்கள் இனிய மகளே!

மண்ணில் 31.01.1949

விண்ணில் 05.12.1998

திருமதி
ராணி ஜெகசோதி
(முன்னாள் ஆசிரியர்)
தி/சென். ஜோசப் கல்லூரி, திருகோணமலை.

குடும்பத்தினர்,
200, சென் பெனடிக் ரோட்,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

(92285)

## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 25 ★ 01 ★ 1947



மறைவு 05 ★ 12 ★ 2008

அமரர் தணிகாசலம் ஜெயநாதன்
(கமக்காரமாளிகை, உழவர் களஞ்சியம்-உரிமையாளர்)

அன்பான வார்த்தைகளாலும்
அயராத உழைப்பாலும்
அனைவரையும் அரவணைத்து
அகிலத்தில் ஏற்றமுற வைத்த தெய்வமே!
பாசத்தின் இருப்பிடமாய்
பொறுமையின் பொக்கிசமாய்
எங்கள் இதயத்தில் என்றும்
அணையாத் தீபமாய் சுடர் வீசும்
எங்கள் தெய்வமே
ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறுமோ நம்துயர்

திருநெல்வேலி,
சுன்னாகம் இணுவில்

கமக்கார மாளிகை,
உழவர் களஞ்சிய ஊழியர்கள்

(92858)


A.L-கணித, விஞ்ஞான மாணவர்களே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லையா?

இணைந்து கொள்ளுங்கள்

INSTITUTE OF CHEMISTRY CEYLON

உடன் நீங்களும் இரசாயனவியல் பட்டதாரியாகி மேலும் வளர முடியும்.

விபரங்களுக்கு:
1)பதிவாளர், திரு. N.I.N.S நடராசா (0112 861653)
2) இரசாயனவியல் ஆசிரியர், அ.லோகநாதன், யாழ்.மத்திய கல்லூரி.

(92847)



DAY CLASS

க.பொ.த உயர்தர பகல் நேர வகுப்புக்கள்
ஆரம்பம் 05.12.2009
சனிக்கிழமை காலை 9 மணி
வழமையான ஆசிரியர் குழு

(சி/562933)


## 1st Year Remembrance of Our Beloved Father



MR. JOE ARIYARATNAM

*Who Departed On*
*5th December 2008*

Though one year has passed
It seems like yesterday
'Memories are treasures
No one can steal
Death leaves a heart ache
No one can heal
Loving you always
Forgetting you never
Remembered with great affection.
Sadly missed by your
Beloved Daughter (Roopi) Son-in-law (Lenin) and Grand Children (Aaron & Abigail)

(92807)

*29/1, Somasundaram Avenue, Chundikuli, Jaffna.*

## மரண அறிவித்தல்கள்

### ரவீந்திரன் செல்வபாமா



சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ரவீந்திரன் செல்வபாமா 01.12.2009 செவ்வாய்க்கிழமை அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் செல்வரத்தினம் (தங்கவேலு) -ரத்தினம் (ராணி) தம்பதியினரின் அன்பு மகளும், ரவீந்திரனின் அன்பு மனைவியும், உஷாவின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.12.09) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொற்புலவு இந்து மயானத் தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (92846)
செல்வரத்தினம் (தங்கவேலு) குடும்பத்தினர்.

### வேலுப்பிள்ளை பொன்னையா



விழிசிட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பொன்னையா நேற்று (04-12-2009) வெள்ளிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தம்பரம் தம்பதியரின் அன்பு மகனும் விமலாதேவியின் அன்புக் கணவரும் குமரேசன் (குமரன் ஸ்ரோர்ஸ், கந்தரோடை), ஆதித்தன் (யா/ஸ்கந்த வரோதயக் கல்லூரி), மயூரன் (யாழ்.பல்கலைக்கழகம், கலைப் பிரிவு) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04-12-2009) வெள்ளிக்கிழமை கந்தரோடையில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உபாத்தியார் வீதி, கந்தரோடை, சுன்னாகம். (சி/562930)
குடும்பத்தினர்.

### S.K பொன்னம்பலம்



Attorney-at - Law & Notary Public, Chairman & Managing Director Starline Group of Companies, Hotel Ashok - Jaffna, former Director - Overseas Realty (Ceylon) Ltd., former Director- Bank of Ceylon.

விளானை, கரபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் 19, அல்பிரட் பிளேஸ்,கொள்ளுப்பிட்டி, கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் கந்தையா பொன்னம்பலம் 02.12.2009 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் கந்தையா - சேதுப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் கனகசபை (Proctor) - விசலாட்சிஅம்மா தம்பதியரின் மருமகனும் கௌரீஸ்வரியின் அன்புக் கணவரும், சாந்தினி, (Accountant), காலஞ்சென்ற வசந்தினி மற்றும் பாலகுமார் (Asst. Vice President - Technology Equifax), Dr.ஜெயகௌரி, Dr. லலிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற பதஞ்சலி, மற்றும் ஜனனி, Dr. சுகுமாரன், Dr. ரஞ்சித் ஆகியோரின் மாமனாரும் இஷானி, தக்ஷி, தாரணி, அஷ்வினி, ஷோபா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை 06.12.2009 காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கனத்தை இந்து மயானத்திற்கு மு.ப. 11மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படும்.

Tel:2574910

தகவல்: மனைவி, பிள்ளைகள்
19, Alfred Place, Colombo-03.

(சி/562577)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா 726 ஓட்டங்கள் குவிப்பு!

இந்தியா-இலங்கை அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாள் ஆட்ட நேர முடிவின் போது இந்திய அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 443 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இந்தியா - இலங்கை அணிகளுக்கிடையில் 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் கடைசிப் போட்டி தற்போது இந்தியாவில் நடந்து வருகிறது. -

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 393 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் தொடர்ந்து தனது இன்னிங்ஸைத் தொடங்கிய இந்திய அணி நேற்று முன்தினம் (இரண்டாம் நாள்) தனது இன்னிங்ஸைத் தொடங்கியது. அன்றைய தினம் இந்திய அணி ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 443 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஷேவாக் 284 ஓட்டங்களுடனும், டிராவிட் 62 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

பின்னர் நேற்று இந்திய அணியின் இன்னிங்ஸை ஷேவாக்கும் டிராவிட்டும் தொடர்ந்தனர்.

நேற்றுமுன்தினம் அதிரடியாகப் பொழிந்து கொண்டிருந்த ஷேவாக்கின் ஆட்டத்தைப் பார்பதற்காக மிகவும் எதிர்பார்ப்புடன் காத்திருந்த ரசிகர்களுக்கு அவர் ஏமாற்றமளித்தார். நேற்று அவர் வெறும் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவர் மொத்தமாக 293 ஓட்டங்களைச் சேர்த்தார். டிராவிட்டும் 74 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த சச்சின் (53), லக்ஷ்மன் (62) ஆகியோர் அரைச் சதங்களைப் பூர்த்தி செய்து வெளியேறினார்.

யுவராஜ்சிங் 23 ஓட்டங்களுடனும், ஹர்பஜன் சிங் ஓர் ஓட்டத்துடனும், சஹீர்கான் 7 ஓட்டங்களுடனும், சிறிசாந்த் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

அணித்தலைவர் டோனி 100 ஓட்டங்களுடனும் ஓஜா 13 ஓட்டங்களுடனும் களத்திலிருந்தவேளை இந்திய அணி தனது முதலாவது இன்னிங்ஸை இடைநிறுத்திக் கொண்டது.

அப்போது இந்திய அணி 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 726 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

இலங்கை அணி சார்பாக பந்துவீச்சில் முரளிதரன் 4 விக்கெட்டுக்களையும், ஹேரத் 3 விக்கெட்டுக்களையும், வெலகெதர, குலசேகர ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காக இலங்கை அணி நேற்று மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது எந்த வித விக்கெட்டுக்களையும் இழக்காமல் 11 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

ஆரம்ப வீரர்களாக பரணவிதாரன (8), டில்ஷான் (3) ஆகியோர் களமிறங்கி ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

இன்று ஆட்டத்தின் நான்காம் நாளாகும்.

## அடுத்த சச்சின் இனி இல்லை –முரளி

''சர்வதேச கிரிக்கெட் அரங்கில் சாதனை மன்னனாகத் திகழும் சச்சினுக்கு நிகராக இன்னொரு வீரர் உருவாகுவதற்கான வாய்ப்பில்லை'' - என்று ஆணித்தரமாகச் சொல்கிறார் இலங்கை அணியின் 'சுழல் மன்னன்' முரளிதரன்.

அண்மையில் பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் மும்பை மாணவர் சர்பராஸ் கான், 439 ஓட்டங்களை விளாசி புதிய சாதனை படைத்தமையை அடுத்து, இவர் இந்தியாவின் இன்னொரு சச்சினாக உருவெடுத்துள்ளார் என வர்ணிக்கப்பட்டார்.

இதுகுறித்துக் கூறும்போதே முரளிதரன் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''400 ஓட்டங்களைக் கடந்த பள்ளி மாணவனை சச்சினுக்கு மாற்று எனக் கூறுகிறார்கள். அப்படி எதற்காகக் கூறுகிறார்கள் என்று தெரியவில்லை. ஆனால் அப்படிக் கூற முடியாது. இன்னும் நூறு ஆண்டுகள் ஆனாலும் சரி, சச்சினைப் போல எந்த வீரரையும் அடையாளம் காண முடியாது. அவரைப் போல யாரும் இனி உருவாகப் போவதுமில்லை. இந்த நூற்றாண்டின் மிகச்சிறந்த வீரராக அவரே உள்ளார்'' - என்றார்.

## விளையாட்டு அரங்குகளில்

### முரளியின் பந்துகளை அடித்து ஆடுவதே சிறந்த தற்காப்பு முறை - ஷேவாக்

''இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளரான முரளிதரன் வீசும் பந்துகளை அதிரடியாக அடித்து விளையாடுவதே அவருக்கு எதிரான சிறந்த தற்காப்பு முறையாகும்'' - என இந்திய அணியின் நட்சத்திர அதிரடித் துடுப்பாட்ட வீரரான வீரேந்திர ஷேவாக் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியுடனான இரண்டாம் நாள் ஆட்டம் முடிவடைந்த பின்னரே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''முரளிதரன் போன்றவர்களை எதிர்த்து விளையாட வேண்டுமென்றால், அதிரடியாக விளையாடுவதே சிறந்த வழி. இல்லாவிட்டால், துடுப்பாட்ட வீரர்கள் மீது முரளிதரன் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கி விடுவார்.

எனவே, என். மீது முரளி ஆதிக்கம் செலுத்தத் தொடங்கும் முன்பாக, அவர் வீசிய முதல் பந்திலிருந்தே அடித்து விளையாடத் தொடங்கினேன்'' - என்றார்.

# 99 ஓட்டங்களுக்குள் சுருண்டது நியூஸிலாந்து!

நியூஸிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்ட நேரமுடிவின்போது பாகிஸ்தான் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 64 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. முன்னதாக தனது முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்து அணி 99 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, முதல் நாள் ஆட்ட நேரமுடிவின் போது 161 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அன்றைய ஆட்ட நேரமுடிவின்பேது களத்தில் இருந்த கம்ரன் அக்மல், மொகமட் ஆமீர் ஆகியோர் நேற்று தமது ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

கம்ரன் அக்கமல் 70 ஓட்டங்களைப் பெற்றவேளையிலும், மொமட் ஆமீர் 21 ஓட்டங்களைப் பெற்றவேளையிலும் ஆட்டமிழந்தனர்.

பின்வரிசை வீரர்களான உமர் குல் 31 ஓட்டங்களையும் மொகமட் ஆஸிப் 4 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்து ஆட்டமிழந்தனர். கனேரியா எந்தவித ஓட்டங்களையும் பெறாமல் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 264 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் தனது இன்னிங்ஸைத் தொடங்கிய நியூஸிலாந்து அணி பாக். வீரர்களின் பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் திணறியது.

நியூஸிலாந்து அணி சார்பாக துடுப்பாட்டத்தில் ஆகக்கூடுதலாக பிளைன் 29 ஓட்டங்களையும் ரெய்லர் 30 ஓட்டங்களையும் எலியட் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

ஏனைய வீரர்கள் எவரும் இரட்டை இலக்க எண்ணிக்கையைத் தொடவில்லை.

குப்தில், புள்ரன், மக்கலம், ஓ பிரையன் ஆகியோர் எந்தவித ஓட்டங்களையும் பெறாமல் ஆட்டமிழந்த சென்றமை குறிப்பிடல் குரியது.

இறுதியில் நியூஸிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 99 ஓட்டங்களைப் பெற்றவேளை அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து இக்கட்டான நிலையில் உள்ளது.

பாகிஸ்தான் அணி சார்பாக பந்துவீச்சில் மொகமட் ஆஸிப் 4 விக்கெட்டுக்களையும், தனிஷ் கனேரியா 3 விக்கெட்டுக்களையும், உமர் குல் 2 விக்கெட்டுக்களையும், மொகமட் ஆமீர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 165 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடர்ந்த பாகிஸ்தான் அணி, நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 64 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இம்ரான் பார்கட் 35 ஓட்டங்களுடனும், சல்மான் பட் 18 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து சென்றனர். களத்தில் மொகமட் யூசுப் (10), மிஸ்பா உல் ஹக் (1) ஆகியோர் உள்ளனர்.

நியூஸிலாந்து அணி வீரர் ஓ பிரையன் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்.

இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாளாகும்.

# பாக். மசூதியில் குண்டுத் தாக்குதல்: 39 பேர் மரணம்; 40 பேர் படுகாயம்

ராவல்பிண்டி, டிச. 05

பாகிஸ்தானின் ராவல்பிண்டி நகரிலுள்ள பகுதியொன்றுக்குள் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 39 பேர் பலியாயினர். 40 பேர் காயமடைந்தனர் என இராணுவ அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

ராவல்பிண்டி நகரிலுள்ள காசிம் சந்தைப் பகுதியில் இந்த மசூதி அமைந்துள்ளது. இது மக்கள் நடமாட்டமிகுந்த ஒரு பகுதியாகும். நேற்று வெள்ளிக்கிழமை, மசூதிக்குள் தொழுகை நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர்கள் விவரித்தார்கள்.

''குண்டுத்தாக்குதலையடுத்து, அப்பகுதிக்கு அம்புலன்ஸ் வாகனங்களும், இராணுவ வாகனங்களும் விரைந்தன. காயமடைந்தவர்கள் உடனடியாக வைத்திய சாலைகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டார்கள். பலர் ஆபத்தான கட்டத்தில் இருந்தனர்'' என நகராட்சிமன்ற அதிகாரியொருவர் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

''மசூதிக்குள் முதல் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது. இதையடுத்து, அடுத்தடுத்து இரு குண்டுகள் வெடித்தன. குண்டு வெடிப்புகளுக்குப் பின்னர் பாதுகாப்புப் படையினரால் இப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டது. ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படவில்லை'' என நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டார்கள்.

''இந்த குண்டுத் தாக்குதல்களில் 39 பேர் உயிரிழந்துள்ளனர். 40 பேர் வரை காயமடைந்துள்ளனர். இக்குண்டுத்தாக்குதலுக்கு இதுவரை எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் உரிமை கோரவில்லை'' என இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் அதார் அபாஸ் தெரிவித்தார்.

''பெரேட் ஒழுங்கை மசூதியில் இத்தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இங்கிருந்து சிறிது தொலைவில்தான் இராணுவ தலைமையகக் கட்டடங்கள், அநேக அலுவலகங்கள், புலனாய்வு நிறுவன செயலகங்கள் ஆகியவை அமைந்துள்ளன'' என்றும் அப்பாஸ் மேலும் தெரிவித்தார்.

## உலக அரங்கில்

# விமானத்தில் தாயிடம் பால் குடித்த குழந்தை மூச்சுத் திணறி மரணம்!

லண்டன், டிச. 05

தாய்ப்பால் கொடுத்துக்கொண்டிருந்த போது தாய் அயர்ந்து தூங்கிவிட்டதால், எதிர்பாராத விதமாகக் குழந்தை மூச்சுத் திணறி இறந்தது.

வாஷிங்ரன் நகரிலிருந்து குவைத்துக்கு விமானத்தில் சென்ற நான்கு வார பெண் குழந்தைக்கு இந்தப் பரிதாபம் நிகழ்ந்துள்ளது. குழந்தையின் தாய் எகிப்தைச் சேர்ந்தவர். அவருக்கு வயது 29.

யுனைட்டட் ஏர்லைன்ஸ் விமானத்தில் குழந்தையுடன் பயணித்த விமானம் பறந்து கொண்டிருந்தபோது திடீரென அப்பெண்ணின் அலறல் சத்தம் கேட்டு அனைவரும் திரும்பினர்.

மார்பில் தலை தொங்கியபடி தன் குழந்தை கிடப்பதைப் பார்த்து ஒன்றும் புரியாமல் அப்பெண் அழுதுகொண்டிருந்தார். குழந்தையைக் காப்பாற்ற விமானத்திலிருந்த மருத்துவர் ஏதேதோ முயற்சிகள் செய்தார். எதுவும் பயனளிக்கவில்லை.

இந்நிலையில், விமானம் லண்டனிலுள்ள ஹீத்ரூ விமான நிலையத்தில் இறக்கப்பட்டது. அருகில் இருந்த வைத்திய சாலைக்கு குழந்தையைக் கொண்டுசென்றனர். ஆனால், குழந்தை ஏற்கனவே இறந்துவிட்டது என டாக்டர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்கள் சங்கத்தினர் பின்வருமாறு குறிப்பிட்டனர்.

''இது போன்ற சம்பவங்கள் அவ்வப்போது நடப்பதுண்டு. பொதுவாகப் படுத்துக்கொண்டு குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்கக்கூடாது என தாய்மார்களுக்கு அடிக்கடி அறிவுரை கூறுகிறோம். ஆனால், பெரும்பாலானோர் அதை பொருட்படுத்துவதில்லை.

''குறிப்பாக செவிலித் தாய்களுக்கு இந்த அறிவுரையை வலியுறுத்திச் சொல்வோம். தாய்ப்பால் கொடுப்பதற்கு என்று சில வழிமுறைகளை மருத்துவர்கள் கூறுகின்றனர். தாயின் உடல் மீது சாய்ந்த நிலையில் குழந்தை பால் குடிப்பது அபாயகரமானது. குறிப்பாக [illegible] நேரத்தில் நிச்சயம் பாலூட்ட[illegible] படும் வாய்ப்பு உள்ளது'' என்றனர்.

# பங்களாதேஷில் படகு மூழ்கி விபத்து: 39 பயணிகள் உயிரிழப்பு; பலர் மாயம்

டாக்கா, டிசெ.5

வடக்கு பங்களாதேஷ் நதியில் நேற்று வெள்ளிக்கிழமை பயணப் படகொன்று மற்றுமொரு படகுடன் மோதி கவிழ்ந்து மூழ்கி விபத்துக்குள்ளானது. இதில் 30 பேர் பலியாயினர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

கிஸோரி காஞ் மாவட்டத்திலுள்ள டெய்நா நதியில் இவ்விபத்து நிகழ்ந்துள்ளது. தலைநகரான டாக்காவிற்கு வடக்கே, ஏறத்தாழ 50 மைல் (80 கிலோ மீற்றர்) தொலைவில் இந்த இடம் அமைந்துள்ளது என உள்ளூர் பொலிஸ் அதிகாரி அன்வர் ஹொசேய்ன் தெரிவித்தார்.

பயணப்படகில் எண்பதுக்கு மேற்பட்டோர் பயணித்துள்ளனர். கவிழ்ந்த படகிலிருந்து 36 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மற்றும் பலர் காணாமற் போயுள்ளனர். மீட்புப் பணி முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

பயணப் படகால் மோதுண்ட மற்றைய படகுக்கு சேதம் விளையவில்லை. அத்துடன் அதிலிருந்தவர்களும் பாதிப்படையவில்லை என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

## 6 ஷியா முஸ்லிம் யாத்திரிகர் பலி!

சிரியாவில் ஷியா யாத்திரிகர்கள் பயணித்த பஸ்ஸொன்றுக்குள் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 6 யாத்திரிகர்கள் பலியானார்கள். எட்டுப் பேர் படுகாயமடைந்தனர். பஸ்ஸின் பின் பகுதி பலத்த சேதத்துக்குள்ளானது.

ஷியாக்களின் ஸையிதா ஜெயினப் என்னும் புனித ஸ்தலம், சிரியாவின் தலைநகரான டமாஸ்கஸ்ஸின் புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ளது. இந்த ஸ்தலத்தை நோக்கி யாத்திரிகர்கள் பயணித்துக்கொண்டிருந்த பஸ்ஸுக்குள்ளேயே இக்குண்டு வெடித்துள்ளது என அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# நடிகை மர்லின் கஞ்சா புகைக்கும் படம் ரூபா 3 கோடிக்கு ஏலத்தில்!

லண்டன், டிசெ.5

மறைந்த ஹொலிவூட் நடிகை மர்லின் மன்றோ கஞ்சா புகைப்பிடிக்கும் படம் ரூபா 3 கோடிக்கு ஏலத்தில் விற்பனையானது.

ஹொலிவூட் நடிகைகளில் கவர்ச்சியால் உலகத்தையே கலக்கியவர் மர்லின் மன்றோ. 1962 ஆம் ஆண்டு தமது 36 ஆவது வயதில் மர்மமான முறையில் இவர் மரணமடைந்தார். எனினும், இவரது புகழ் இன்றளவும் மங்கவில்லை.

மர்லின் மன்றோவுக்கு கஞ்சா புகைக்கும் பழக்கம் உண்டு. 1959 ஆம் ஆண்டு இவர் தமது நண்பர்களுடன் அமர்ந்து கஞ்சா புகைப்பதை வீடியோ படம் எடுத்துள்ளனர். அந்த படம் ஒன்று ஒருவரிடம் இருந்தது. அதை அவர் ஏலத்தில் விற்க முடிவு செய்தார்.

அந்தப் படம் ஏலத்தில் விடப்பட்ட போது, அதை ஒருவர் 3 கோடி ரூபாவுக்கு எடுத்தார். அவரது பெயரை ஏல நிறுவனம் வெளியிட மறுத்துவிட்டது. மர்லின் மன்றோ தொடர்பான பல்வேறு நினைவுப் பொருள்களையும் அந்நபர் திரட்டி வைத்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாபர் மசூதி இடிப்பு தினத்தையொட்டி இந்தியா முழுவதும் உச்சப் பாதுகாப்பு

## தமிழகத்தில் ஒரு லட்சம் பொலிஸார் குவிப்பு

சென்னை, டிச. 05

பாபர் மசூதி இடிப்பு தினத்தையொட்டி, தமிழகம் முழுவதும் ஒரு லட்சம் பொலிஸார் பாதுகாப்புக்காகக் குவிக்கப்பட்டுள்ளனர்.

சென்னை நகருக்கு 7 தீவிரவாதிகளால் அச்சுறுத்தல் உள்ளது எனத் தகவல்கள் வெளியாகி உள்ளது. இதனால் சென்னையிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

டிசம்பர் 6 ஆம் திகதி (நாளை) பாபர் மசூதி இடிப்பு தினமாகும். இதையொட்டி, பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்று உளவுப்பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளதால் இந்தியா முழுவதும் அனைத்து மாநிலங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. தமிழகத்திலும் உச்சக்கட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அனைத்து மாவட்ட பொலிஸ் சூப்பிரண்டுகளையும் உஷார்படுத்தி பாதுகாப்பைப் பலப்படுத்தும்படி பொலிஸ் டி.ஜி.பி. கே.பி. ஜெயின், கூடுதல் டி.ஜி.பி. ராதாகிருஷ்ணன் ஆகியோர் உத்தரவிட்டுள்ளனர்.

தமிழகத்தில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து கூடுதல் டி.ஜி.பி. ராதாகிருஷ்ணனிடம் கேட்டபோது அவர் கூறியவை வருமாறு -

டிசெம்பர் 6 ஆம் திகதி பாபர் மசூதி இடிப்பு தினத்தையொட்டி வழக்கமாக செய்யப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகள்தான் செய்யப்பட்டுள்ளன. தீவிரவாதிகளிடமிருந்து குறிப்பாக அச்சுறுத்தல் வராவிட்டாலும் கூட, முன் னெச்சரிக்கையாக பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளோம்.

தமிழகத்தில் பாபர் மசூதி இடிப்பு தினத்துக்கு முன்தின நாளும், பாபர் மசூதி இடிப்பு தினத்தன்றும், பாபர் மசூதி இடிப்புத்தினத்துக்கு அடுத்த நாளும் மொத்தம் 3 நாட்கள் பொலிஸாரை உஷார்நிலையில் இருக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த 3 நாள்களிலும் பொலிஸார் எவருக்கும் விடுமுறை கிடையாது. அனைத்துப் பொலிஸாரும் பணியில் இருக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

தமிழகத்தை பொறுத்தமட்டில் சுமார் ஒரு லட்சம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள். தமிழ்நாடு விசேட பொலிஸ் படையினர், அதிரடிப் படையினர், அதிவிரைவு படையினர், கொமாண்டோ படையினர் முக்கியமான இடங்களில் துப்பாக்கியோடு நிறுத்தப்படுவார்கள். கோவில்கள், மசூதிகள், கிறிஸ்தவ ஆலயங்களிலும் பாதுகாப்பு பலமாக இருக்கும்.



வேதாரண்யத்தில் நேற்றுமுன்தினம் குளத்தில் வான் மூழ்கியதில் 9 மாணவ - மாணவிகளும், ஆசிரியை ஒருவரும் பலியானார்கள். இதையடுத்து மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள தீயணைப்புப் படையினர் மற்றும் கிராமத்தினர்.

# தனி தெலுங்கானா அமைக்க நாடாளுமன்றில் பிரேரணை!

## பா.ஜ.க. கோரிக்கை

தனித் தெலுங்கானா மாநிலம் அமைக்க நாடாளுமன்றத்தில் பிரேரணை தாக்கல் செய்தால் ஆதரிப்போம் - என்று பாரதீய ஜனதாக் கட்சி அறிவித்துள்ளது.

புதுடில்லி மேல் சபையில் கேள்வி நேரத்தின்போது, இந்தப் பிரச்சினை தலைதூக்கியது. அப்போது பாரதீய ஜனதாவைச் சேர்ந்த பிரகாஷ் ஜவ்தேகர் பேசியவை வருமாறு -

ஆந்திரா மாநிலத்தில் தெலுங்கானா பகுதியை தனி மாநிலமாக அறிவிக்க வேண்டும் என்று தெலுங்கானா ராஷ்டிர சமிதி கட்சியினர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துப் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

2004 ஆம் ஆண்டில் தெலுங்கானா மாநிலம் அமைத்துத் தருகிறோம் என்று தெலுங்கானா ராஷ்டிர சமிதிக்கு, காங்கிரஸ் வாக்குறுதி அளித்தது. ஆனால் இதுவரை அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. தெலுங்கானா பகுதி மக்களை காங்கிரஸ் ஏமாற்றி விட்டது.

இதுவரை தனி தெலுங்கானா அமைக்கஎதிர்ப்புத் தெரிவித்து வந்த தெலுங்கு தேசம் கட்சியும் இப்போது ஆதரிக்கிறது. இந்த நிலையில், தெலுங்கானா மாநிலத்தை உருவாக்குவது தொடர்பாக நாடாளுமன்றத்தில் மத்திய அரசு பிரேரணை தாக்கல் செய் தால் அதை ஆதரிக்க பா.ஜ.க. தயாராக இருக்கிறது - என்றார்.

# மாவோயிஸ்ட் இயக்கத்தினருடன் திரிணாமுல் காங்கிரஸுக்கு தொடர்பு

## பிரதமரிடம் முறைப்பாடு செய்ய இடதுசாரிகள் முடிவு

புதுடில்லி, டிசெ.5

மாவோயிஸ் தீவிரவாதிகளுக்கும் திரிணாமுல் காங்கிரஸுக்கும் தொடர்பு இருக்கிறது - என்று பிரதமரிடம் முறைப்பாடு செய்ய இடதுசாரித் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர்.

இதுகுறித்து சீதாராம் யெச்சூரி நேற்று முன்தினம் கூறியவை வருமாறு -

மாவோயிஸ்டுகளும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியும் இணைந்து செயற்படுகிறது. பல்வேறு கூட்டங்களில் மாவோயிஸ்ட் தலைவர்களும் திரிணாமுல் காங்கிரஸ் தலைவர்களும் இணைந்து உரையாற்றியதற்கான ஆதாரங்களை பிரதமரிடம் அளிப்போம். அதற்காக பிரதமர் மன்மோகன் சிங்கை இடதுசாரி கட்சிகளைச் சேர்ந்த எம்.பிக்கள் சந்திக்க உள்ளனர். மாவோயிஸ்டுகளை ஒழிக்கப் போவதாக கூறும் மத்திய அரசில் திரிணாமுல் காங்கிரஸை எப்படி வைத்திருக்கலாம் என்றும் அவரிடம் கேட்போம் - என்றார்.

# ஈழ அகதிகளுக்கு மத்திய அரசு குடியுரிமை வழங்க வேண்டும்

## புதுடில்லியில் கனிமொழி வலியுறுத்து

சென்னை, டிசெ.05

அகதிகளாக வந்த இலங்கைத் தமி ழர்களுக்கு மத்திய அரசு குடியுரிமை வழங்க வேண்டும் - என்று புதுடில்லி மேல் சபையில் கனிமொழி எம்.பி. வலியுறுத்தி னார்.

இதுகுறித்து அவர் அங்கு பேசியவை வருமாறு -

இலங்கையில் 1983 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற இன மோதல்கள் காரணமாக ஏராளமான தமிழர்கள் இந்தியாவிற்கு அகதிகளாக வந்தனர். தற்போது தமிழகத்தில் உள்ள 114 முகாம்களில் 73 ஆயிரத்து 74 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகத் தங்கியுள்ளனர். மேலும், 32 ஆயிரத்து 240 பேர் தனியாகத் தங்கியுள்ளனர்.



முகாம்களில் உள்ள தமிழர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான பணம், உடை, உணவு ஆகியவற்றை மத்திய அரசின் உதவியோடு தமிழக அரசு அளித்து வருகிறது. அகதிகளுக்கான வரைமுறைகள் குறித்து 1951 ஆம் ஆண்டு ஐ.நா.சபை இயற்றிய தீர்மானத்தின் கீழ் இந்தியா செயற்பட்டு வருகிறது.

அவர்களின் வருகை, தங்குதல் மற்றும் வெளியேறுதல் ஆகியவை 1946 ஆம் ஆண்டு வெளிநாட்டவர் சட்டத்தின்கீழ் நடைபெற்று வந்தது.

தற்போது 1996 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதியிட்ட மத்திய அரசின் அரசாணை 370 இன்படி, இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு 1993 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தற்போதுவரை வந்தவர்கள், வெளிநாட்டிலிருந்து வந்தவர்களுக்கான சட்ட விதிகளின் கீழ் உட்படுத்தப்படுகிறார்கள்.

1983 இற்குப் பின்னர் வந்தவர்கள் அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டனர். எனவே, மத்திய அரசு, இலங்கை அகதிகள் தொடர்பாக உரிய விதிமுறைகளை பின்பற்ற நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு கொள்கிறேன். இதன் மூலம் தேவையற்ற சட்டப் பிரச்சினைகள் தவிர்க்கப்படும் என நினைக்கிறேன்.

இதற்கான கெடுத் திகதியை மேலும் நீடிக்க வேண்டும். ஏனெனில் இலங்கையில் இருந்து அகதிகள் வருவது தொடர்ந்து நீடித்து வருகிறது. மேலும், இந்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டும்.

இதுதொடர்பாக தமிழக முதல்வர் கருணாநிதி ஏற்கனவே வேண்டுகோள் விடுத்துள்ளார். இலங்கையில் இருந்து அகதிகளாக வருகை தந்தோர் அவர்களது சொந்த நாட்டில் வாழ்ந்த காலத்தைவிட தற்போது தமிழகத்தில் அதிக காலம் வாழ்ந்து வருகிறார்கள் - என்றார்.

# மத்திய அரசை எதிர்த்து எதிர்க்கட்சிகள் 18 ஆம் திகதி புதுடில்லியில் ஆர்ப்பாட்டம்!

## சமாஜ்வாதிக் கட்சி ஏற்பாடு

புதுடில்லி, டிச. 05

மத்திய அரசை எதிர்த்து அ.தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுடன் இணைந்து புதுடில்லியில் 18 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் - என்று சமாஜ்வாதிக் கட்சித் தலைவர் முலாயம்சிங் அறிவித்தார்.

புதுடில்லியில் சமாஜ்வாதிக் கட்சித்தலைவர் முலாயம்சிங் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தபோதே இதனைக் கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு -

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் கொள்கைகளை எதிர்த்து பா.ஜ.க. தவிர்த்த அனைத்து எதிர்க்கட்சிகளும் பங்கேற்கும் ஆர்ப்பாட்டம் புதுடில்லியில் 18 ஆம் திகதி நடைபெறும். இதில், இடதுசாரிகள், தெலுங்கு தேசம், அ.தி.மு.க., ராஷ்ட்ரீய லோக்தளம், மதச்சார்பற்ற ஜனதாதளம், இந்திய தேசிய லோக்தளம் ஆகிய கட்சிகள் பங்கேற்கின்றன. அயோத்தி பிரச்சினையில் இருந்து விலகி, முஸ்லிம்கள் பற்றிய கருத்துகளை மாற்றிக் கொண்டால், பா.ஜ.கவுடனும் இணைந்து செயற்படத் தயாராக இருக்கிறோம்.

மத்திய அரசு, லிபரான் கமிஷன் சிபாரிசுகளை மட்டுமின்றி, ரங்கநாத் மிஸ்ரா கமிஷன், ஸ்ரீகிருஷ்ணா கமிஷன் ஆகியவற்றின் சிபாரிசுகளையும் அமுல்படுத்தாமல் உள்ளது. இதற்காக மத்திய அரசுக்குக் கண்டனம் தெரிவிப்போம். பண வீக்கம், சீனா தொடர்பான மத்திய அரசின் கொள்கை, இந்தியா மீதான சீனாவின் நெருக்குதல் நடவடிக்கை, பாகிஸ்தான், சீனா பற்றிய ஒபாமாவின் அறிக்கை ஆகியவற்றை கண்டித்தும் ஆர்ப்பாட்டத்தில் குரல் எழுப்புவோம்.

நரசிம்மராவ் அரசின் மெத்தனத்தால் தான், பாபர் மசூதி இடிக்கப்பட்டது. நரசிம்மராவ்தான், மன்மோகன்சிங்கை நிதி அமைச்சராக நியமித்தார். அதற்கு குருதட்சணையாக, நரசிம்மராவுக்கு லிபரான் கமிஷன் மூலம் மன்மோகன்சிங் நற்சான்றிதழ் கொடுத்துள்ளார் - என்றார்.

# உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டுக்கு கலைஞர் தலைமையில் குழு அமைப்பு

சென்னை, டிசெ.5

உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டுக்கு முதல்வர் கருணாநிதி தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் துணைத் தலைவர்களாக அமைச்சர் அன்பழகன், துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் தலைமைக் குழு, சிறப்பு மலர்க் குழு மற்றும் தமிழ் இணைய மாநாட்டு குழு ஆகியவற்றை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. கோவை மாநகரில் 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதிவரை உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடைபெறுவதையொட்டி ஏற்கனவே ஆய்வரங்க அமைப்புக் குழு மற்றும் ஒருங்கிணைப்புக் குழு அமைத்து முதல்வர் கருணாநிதி ஆணையிட்டுள்ளார்.

## இந்தியச் செய்திகள்

# ஒரு லட்சத்து 84,000 பேருக்கு தமிழ்நாட்டில் எயிட்ஸ் நோய்!

கோவை, டிச 05

தமிழகத்தில் ஒரு லட்சத்து 84 ஆயிரம் பேருக்கு எயிட்ஸ் நோய் உள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது.



தமிழகத்தில் எய்ட்ஸ் நோய் பரவுவதைத் தடுக்க விழிப்புணர்வு ஏற்படுத்துதல், எய்ட்ஸ் நோயாளிகள் மீது கவனம் செலுத்துதல் போன்ற பணிகளில் தமிழகம் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு மையம் ஈடுபட்டுள்ளது. டிசெம்பர் முதலாம் திகதி, உலக எய்ட்ஸ் தினத்தையொட்டி இந்த மையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தமிழகத்தில் 2 ஆண்டுக்கு ஒரு முறை எயிட்ஸ் நோயாளிகள் எண்ணிக்கை கணக்கெடுக்கப்படுகிறது. கடந்த 2007ஆம் ஆண்டு கணக்கெடுப்புப்படி, தமிழகத்தில் ஒரு லட்சத்து 84 ஆயிரம் எய்ட்ஸ் நோயாளிகள் உள்ளனர்.

கோவையில் 6 ஆயிரம் பேர் உள்ளனர். அதேசமயம், எச்.ஐ.வி. தடுப்பு, சிகிச்சை, ஆதரவு மற்றும் பராமரிப்பு சேவை வழங்குவதில் தமிழகம் முன்மாதிரியாக உள்ளது. மாநில கணக்கெடுப்பு, மத்திய சுகாதார துறையின் கணக்கெடுப்பு தகவலின்படி தமிழ்நாட்டில் எச்.ஐ.வி. தாக்கத்தின் அளவு 2001ஆம் ஆண்டு 1.13 சதவீதமாக இருந்தது. இது, 2007 ஆம் ஆண்டு 0.25 சதவீதமாக குறைந்துள்ளது. தமிழக அரசின் தொடர் தடுப்பு பணிகளே இதற்குக் காரணம்.

இளைஞர்களிடையே எயிட்ஸ் தடுப்பு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக 986 கல்லூரிகளில் செஞ்சுருள் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இதில், 57 ஆயிரம் மாணவர்கள் சேர்ந்துள்ளனர். எச்.ஐ.வி. உள்ளவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக மாநிலம் முழுவதும் 36 ஏ.ஆர்.டி மையங்கள் உள்ளன. இவற்றில், கடந்த ஒக்டோபர் கணக்குப்படி 38 ஆயிரத்து 390 பேர் தொடர் சிகிச்சை பெற்று வருகின்றனர் - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் சிகிச்சை நிலையத்திற்கு ஒதுக்கப்பட்ட காணியில் தூண்களைத் தகர்த்து வேறு பெயர்ப் பலகை

## நோயாளர் தரப்பில் விசனம்

யாழ்ப்பாணம்.டிசெ.5

யாழ்.நகரத்தில் மீனாட்சிபுரம் பகுதியில் புற்றுநோய் சிகிச்சை நிலையம் அமைப்பதற்கென உத்தேசமாகக் குறித்து ஒதுக்கப்பட்ட காணியைச் சுற்றி நடப்பட்ட வேலித் தூண்கள் தகர்க்கப்பட்டு உள்ளே வேறு பெயர்ப் பலகை நாட்டப்பட்டுள்ளது.

இது குறித்து புற்றுநோயாளர் தரப்பில் கடும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டில் புற்றுநோயால் பாதிப்புறும் மக்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே செல்கிறது. இப்போது யாழ். வைத்தியசாலையில் புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவு இயங்கி வந்தாலும் நோயாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப உகந்த வசதிகள் இல்லை.

யாழ்.போதனா வைத்தியசாலையின் நரம்பியல் பதிவுக் கட்டடத்திலேயே புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவு போதிய இட வசதியின்றி இயங்கிவருகிறது. மருதனார் மடத்திலும் உப சிகிச்சை நிலையம் இயங்கி வருகிறது. தெல்லிப்பளை ஆஸ் பத்திரியில் கதிர்வீச்சு நிலையம் மட்டுமே செயற்படுகிறது.

அதனால் குடாநாட்டில் புற்றுநோயால் பாதிக்கப்படுவோருக்கு ஒரே இடத்தில் தேவையான சகல சிகிச்சைகளையும் வழங்கும் புற்றுநோய் ஆஸ்பத்திரி ஒன்றின் அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு நகரப் பகுதியில் மீனாட்சிபுரத்தில் சிகிச்சை நிலையம் ஒன்றை அரசாங்கக் காணியில் நிர்மாணிக்க சுகாதாரத் திணைக்களம் முன் வந்துள்ளது.

அதன் ஆரம்ப நடவடிக்கையாக குறிப்பிட்ட காணியைச் சுற்றிவர முட்கம்பித் தூண்கள் ஒருசில நாள்களுக்கு முன்னர் நடப்பட்டன. அவற்றைப் பிடுங்கி உள்ளே சென்று விளையாட்டு மைதானம் ஒன்றிற்கான பெயர்ப்பலகை நடப்பட்டுள்ளது.

இது குறித்து புற்றுநோயாளர்கள் மிகுந்த விசனம் தெரிவித்திருக்கிறார்கள். ஒரே இடத்தில் சிகிச்சை பெறுவதற்கு வசதியான வைத்திய நிலையம் ஒன்று இன்றியமையாத தாக இருக்கும்போது அதற்கான முயற்சிகளைத் தடுக்கும் விதத்தில் நடந்து கொள்வது கவலைக்குரியது என்று சுட்டிக் காட்டுகிறார்கள்.

இதேவேளை நோயாளர்- பொதுமக்கள்- நலனுக்கு குந்தகம் விளைவிக்கும் இச் செயற்பாடு குறித்து உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிய வந்துள்ளது. (அ)

# இம்முறை ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சைக்கு வவுனியா முகாமில் 6,222 பரீட்சார்த்திகள்

கொழும்பு, டிச. 05

இவ்வருடம் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு வவுனியா நிவாரணக் கிராமங்களில் இருந்து 6 ஆயிரத்து 222 பரீட்சார்த்திகள் தோற்ற உள்ளனர் என வவுனியா வலயக்கல்விப் பணிப்பாளர் ரஞ்ஜனி ஒஸ்வேல்ர்ட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இம்மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு நிவாரணக் கிராமங்களில் இருந்து தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக ஆயிரத்து 310 பரீட்சார்த்திகளும் ஏனைய பரீட்சார்த்திகளாக 4 ஆயிரத்து 912 மாணவர்களுமாக 6 ஆயிரத்து 222 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளார்கள்.

இது தவிர்ந்த வவுனியா மாவட்டப் பாடசாலைகளில் இருந்து 5 ஆயிரத்து 611 மாணவர்கள் தோற்றுகின்றனர். இந்தப் பரீட்சார்த்திகளுக்காக 51 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதே வேளை, பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் தங்களுக்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் வவுனியா வலயக்கல்விப் பணிப்பாளர் ரஞ்ஜனி ஒஸ்வேல்ர்ட் கூறினார்.

# மணற்காடு புனரமைப்புக்கு 6 லட்சம் ரூபா ஒதுக்கீடு

பருத்தித்துறை, டிசெ.5

மருதங்கேணி கோட்டத்திலுள்ள மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் கட்டடத்திருத்த வேலைக்காக 6 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 'யுனிசெப்' நிறுவனம் இந்த நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. 2004 ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போது இப் பாடசாலைக் கட்டடங்கள் பலத்த சேதத்துக்கு உள்ளாகின. இந்த அனர்த்தத்தைத் தொடர்ந்து மக்களுக்கான தற்காலிக குடியிருப்புக்கள் குடத்தனை மேற்கில் அமைக்கப்பட்டன. அந்த மக்களுக்கு வசதியாக பாடசாலையும் அவ்விடத்திலேயே தற்காலிக கொட்டகையில் இயங்கி வந்தது. இப்பாடசாலையை புதிய இடத்தில் அமைத்துக் கொடுக்க வெளிநாட்டு நிறுவனம் ஒன்று முன்வந்த போதிலும் பின்னர் அம்முயற்சி கைவிடப்பட்டது. தற்போது மணற்காட்டுப் பகுதியில் மக்கள் மீளவும் குடியேற்றப்பட்டதைத் தொடர்ந்து பாடசாலையும் மீளவும் பழைய இடத்திலேயே பல வசதியீனங்களுக்கு மத்தியில் இயங்கிவருகிறது. இந்த பாடசாலைக்கு ஒதுக்கப்பட்ட நிதி பௌதிகவளத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-190)

# மரணமடைந்த, வெளிநாடு சென்ற வாக்காளர்கள் விவரம் திரட்டப்படுகிறது

யாழ்ப்பாணம், டிசெ.5

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் மரணமடைந்துவிட்ட மற்றும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள வாக்காளர் தொடர்பான விவரங்கள் கிராம சேவையளர்கள் ஊடாகத் திரட்டப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ். சுதாகரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

முதற்கட்டமாக யாழ்.தேர்தல் மாவட்டத்திலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றவர்களினதும், இறந்தவர்களினதும் விவரங்கள் கிராம சேவையாளர்கள் ஊடாகத் திரட்டப்பட்டு வருகின்றன.

பெரும்பாலும் இந்தப்பணிகள் அடுத்த வார முற்பகுதியில் நிறைவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது- என்றார். (50-9)

# *சுன்னாகம், மல்லாகம் பகுதியில் நேற்றுக் காலை திடீர் சோதனை

வலி.வடக்கு, டிசெ.5

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் உள்ள மருதனார்மடம், சுன்னாகம் மற்றும் மல்லாகம் பகுதிகளில் இராணுவத்தினர் பயணிகளை சோதனையிடும் நடவடிக்கையில் நேற்றுக் காலையில் ஈடுபட்டனர்.

பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் மற்றும் தமது கடமைகளுக்காக யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றவர்கள் அனைவரும் வாகனங்களில் இருந்து இறக்கப்பட்டு அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்டன.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இத்தகைய சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றன. இதனால் பொதுமக்கள் அசௌகரியங் களை எதிர்நோக்கினர். காலை 9 மணிக் குப் பின்னர் சோதனை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. (ஒ-86)

# காவலூர் றோ.க. பாடசாலையை மீள ஆரம்பிக்குமாறு கோரிக்கை

ஊர்காவற்றுறை,டிசெ.5

ஊர்காவற்றுறை றோ.க.தமிழ் ஆண்கள் ஆரம்ப பாடசாலையை மீளவும் ஆரம்பிக்குமாறு ஊர்காவற்றுறை பிரதேச மக்கள் கல்வி அதிகாரிகளிடமும் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பாடசாலைச் சுற்றாடலில் வாழும் மக்கள் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றும் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில் 1996 இல் ஊர்காவற்றுறையில் மக்கள் மீளக்குடியமர்ந்த போது மாணவர் எண்ணிக்கை குறைவாக இருந்ததால் அவர்கள் தற்காலிகமாக புனித மரியாள் மகளிர் பாடசாலையில் இணைந்து கற்று வந்தனர்.

தற்பொழுது வன்னிக்கு இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளதால் இப்பாடசாலையில் மாணவர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் இடநெருக்கடி உட்பட பல்வேறு வசதியீனங்கள் ஏற்பட்டுள்ளன.

எனவே அடுத்த வருட தொடக்கம் முதல் ஊர்காவற்றுறை றோ.க. தமிழ் ஆண்கள் ஆரம்ப பாடசாலையை மீளவும் ஆரம்பித்து மாணவரின் கல்வி முன்னேற்றத்துக்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-21)

## பண்டத்தரிப்பில் இன்று காசநோய் சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.5

காசநோய்க்கான சிகிச்சை முகாம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பண்டத்தரிப்பு கடாப்புலம் வைத்தியசாலையில் நடைபெறும்.

மூன்று வாரங்களுக்கு மேல் தொடர்ச்சியான இருமல் மற்றும் சளித்தொல்லையால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் இந்த வைத்திய சிகிச்சையில் பங்குபற்றிப் பயன் பெறுமாறு மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி டாக்டர். எஸ். யமுனானந்தா அறிவித்துள்ளார். (ஒ-224)

## சாரணர் பாசறை

யாழ்ப்பாணம்,டிசெ.5

சாவகச்சேரி மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா வித்தியாலயத்தில் சாரணர் கற்கை நெறி கலைக் கூறுப் பயிற்சியும், பாசறையும் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

இலங்கைச் சாரணர் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டக்கிளை, தென்மராட்சிக் கிளை ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ஒ-1)

## பெண்ணின் சடலம் அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ.5

கடந்த செவ்வாய்கிழமை நவாலி வெளியில் இருந்து மீட்கப்பட்ட பெண்ணின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைச் சேர்ந்த 36 வயதான ஆர்.செல்வபாமா என அடையாளம் காணப்பட்டுள்ளது.

## செயலமர்வு ஒத்திவைப்பு

தீவக வலயப் பாடசாலைகளில் தரம் 9 செய்முறைத் திறனும், தொழில் நுட்பத் திறனும் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இன்று கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடைபெறவிருந்த செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளதாகவும், புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-21)

## வடமராட்சியில் ஆசிரிய உதவியாளர் 91 பேர் நியமனம்

பருத்தித்துறை,டிசெ.5

வடமராட்சி கல்வி வலயத்தில் 91 ஆசிரிய உதவியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றியவர்களுக்கே இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களை பாடசாலைகளில் நியமிக்க இனிமேல் அனுமதியில்லை எனவும், அதனை மீறுவோர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சு அறிவித்துள்ளது. (ஒ-190)

## மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு.டிசெ.5

நேற்று நான்காம் திகதி இழுக்கப்பட்ட மஹஜன சம்பத சீட்டிழுப்பில் 295943 என்ற இலக்கங்களை சதுரங்களில் இடது பக்கத்திலிருந்து வலப்பக்கமாக எழுதிய இரண்டு பேருக்கு தலா இரண்டு மில்லியன் ரூபா பரிசு கிடைக்கவுள்ளது.

95943 என்ற இலக்கங்களை சதுரங்களில் சரியாக எழுதிய 14 பேருக்குத் தலா ஒரு லட்சம் ரூபா பரிசாகக் கிடைக்கும்.

5943 என்ற இலக்கங்களைச் சதுரத்தில் சரியாக எழுதிய 155 பேருக்கு தலா பத்தாயிரம் ரூபா பரிசாகக் கிடைக்கும்.

943 என்ற இலக்கங்களைச் சதுரங்களில் சரியாக எழுதிய1,402 பேருக்குத் தலா ஆயிரம் ரூபா பரிசு கிடைக்கும்.

43 என்ற இலக்கங்களைச் சதுரங்களில் சரியாக எழுதிய 15,015 பேருக்குத் தலா நூறு ரூபா பரிசாகக் கிடைக்கும்.

3 என்ற இலக்கத்தை சதுரத்தில் சரியாக எழுதிய 1,47,613 பேருக்குத் தலா 20 ரூபா பரிசாகக் கிடைக்கும்.

வலப் பக்கத்திலிருந்து இடதுபக்கமாக 29,594 என்ற இலக்கங்களைச் சதுரங்களில் சரியாக எழுதிய 15 பேருக்குத் தலா பத்தாயிரம் ரூபா பரிசாகக் கிடைக்கும்.

2,959 என்ற இலக்கங்களைச் சதுரங்களில் சரியாக எழுதிய 151 பேருக்குத் தலா ஆயிரம் ரூபா பரிசாகக் கிடைக்கும்.

295 என்ற இலக்கங்களைக் சதுரங்களில் சரியாக எழுதிய 1,475 பேருக்கு தலா நூறு ரூபா பரிசாக வழங்கப்படும்.

29 என்ற இலக்கங்களை சதுரங்களில் சரியாக எழுதிய 14,774 பேருக்கு தலா ஐம்பது ரூபா பரிசாகக் கிடைக்கும்.

'T' என்ற எழுத்தை முதலாவது சதுரத்தில் எழுதிய 59,120 பேருக்கு இருபது ரூபா பரிசாகக் கிடைக்கும். (அ)

## மின்சாரம் தாக்கி இளைஞன் மரணம்

யாழ்ப்பாணம்,டிசெ.05.

மருதனார்மடம், வி.சி. லேன் பகுதியில் மின்சாரம் தாக்கி இளைஞன் ஒருவர் மரணமானார்.

நேற்று நண்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வரதகுமார் பிரதீபன் (வயது - 17) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-1-16)

## செயலமர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.05

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் நியமனம் செய்யப்பட்ட 42 ஆசிரிய உதவியாளர்களுக்கான நான்கு நாள் வாண்மை விருத்திச் செயலமர்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் காலை 7.30 மணிக்கு வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறும்.(ஒ-207)

## இடம்பெயர்ந்த மாணவருக்கு வடமராட்சியில் நான்கு பரீட்சை நிலையங்கள்

பருத்தித்துறை,டிசெ.5

வடமராட்சியில் மீள்குடியேற்றப்பட்ட மாணவர்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக நான்கு பரீட்சை நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே இப்பரீட்சை நிலையங்கள் அமைப்படவுள்ளன.

நாலன்புரி நிலையங்களிலிருந்து மீள் குடியேறியுள்ள சுமார் 300 க்கு மேற்பட்ட மாணவர்கள் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பித்துள்ளார்கள். (50-190)

## ஹொங்கொங் ஷங்காய் வங்கிக் கிளை யாழ்நகரில்

யாழ்ப்பாணம்,டிசெ.5

ஹொங்கொங் ஷங்காய் வங்கியின் கிளை ஒன்றை யாழ்ப்பாணத்தில் திறப்பதற்கு ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வங்கியின் உயர்மட்ட அதிகாரிகள் குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து புதிய கிளையை திறப்பது குறித்து ஆராய்ந்துள்ளது.

யாழ். அரச அதிபர் கே.கணேஷைச் சந்தித்து குடாநாட்டு நிலைமைகளை கேட்டறிந்ததுடன் தமது வங்கிக் கிளையை ஆரம்பிப்பது குறித்தும் அந்த அதிகாரிகள் கலந்துரையாடினர் என்று தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## றொபேர்ட் ஓ பிளேக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவியேற்ற பின்னர் றொபேர்ட் ஓ பிளேக் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வது இதுவே முதற் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விஜயத்தின்போது பிளேக், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா உட்பட முக்கியஸ்தர்களை சந்திக்கவுள்ளார். (சி)

## பொன்சேகாவின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாங்கியவாறு களுத்துறை நகரில் பேரணியொன்றையும் நடத்தியுள்ளனர். இங்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் விஜேமான, யுத்தத்தின் மூலம் நாட்டைக் காப்பாற்றிய இராணுவத்தினரின் படங்களை அழிப்பதற்கு அரச தரப்பினர் மேற்கொள்ளும் முயற்சிகளை வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்தார்.

ஆயிரக் கணக்கான சிங்களவர்களைக் கொலை செய்த கருணா, பிள்ளையான் போன்றவர்கள் தற்போது அமைச்சர்களாக இருக்கின்றனர் எனவும், இன்று அவர்கள் தேசப்பற்றாளர்களாக மாறியிருப்பதுடன், நாட்டைக் காப்பாற்றிய இராணுவத்தினர் தேசத் துரோகிகளாக அடையாளப்படுத்தப்படுகின்றனர் எனவும் விஜேமான கூறினார். (அ-சி)

## ரணில் விக்கிரம....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவே இந்த விஜயத்தின்போது அவர் கலந்துரையாடுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் ஒன்பதாம் திகதி யாழ். குடாநாட்டுக்குச் சென்று அங்கு பலதரப்பட்டவர்களையும் சந்திக்கவுள்ளார் என்பது தெரிந்ததே. (சி)

# கிணற்றில் வீழ்ந்த மனைவியைக் காப்பாற்ற குதித்த கணவனும் மரணமானார்!

## நாவாந்துறையில் நேற்று மாலை சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ.5

நாவாந்துறை, காதிஅபூபக்கர் வீதியில் நேற்று மாலை 6 மணியளவில் கிணற்றுக்குள் வீழ்ந்த குடும்பப்பெண் மரணமானார். அவரைக் காப்பாற்ற கிணற்றில் குதித்த கணவனும் மரணமானார்.

தேவராசா கஜமுகன் (வயது - 27), அவரது மனைவி கஜமுகன் ஜெயமாலினி (வயது - 20) ஆகியோரே மரணமானவர்களாவர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலங்களை மீட்டு யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றிரவு ஒப்படைத்தனர்.

(1-5-78)

## நாடு திரும்பினார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிகுந்த பரபரப்பை உருவாக்கிய இந்த விஜயத்தின்போது சரத் பொன்சேகா இந்திய அரசியல் தலைவர்களைச் சந்திக்காத போதிலும் உயரதிகாரிகளைச் சந்தித்துள்ளார்.

சரத் பொன்சேகா மும்பை மற்றும் பீஹாரில் உள்ள பௌத்த ஆலயங்களுக்கும் விஜயம் மேற்கொண்டுள்ளார். இன்று நடைபெறவுள்ள ஐ.தே.கட்சியின் 54 ஆவது தேசிய மாநாட்டில் அவர் உரையாற்றிவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சோமாலியக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியூஸிலாந்துக்கு சொந்தமான கப்பல் ஒன்றில் குறித்த இலங்கையர்கள் பணியாற்றினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்கொள்ளையர்களுக்கும், நியூஸிலாந்து கப்பல் நிறுவனத்திற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் குறித்த இலங்கையர் உள்ளிட்ட கப்பல் பணியாளர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். சோமாலியகடற் கொள்ளையர்கள் கோரிய கப்பப் பணம் செலுத்தப்பட்டுள்ளது என மற்றுமொருதகவல் சுட்டிக்காட்டுகின்றது.

## சர்வதேச மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ்.சிறீதரன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி., தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களான மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், அரிய நேத்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுக் கூட்டத்தைத் தொடர்ந்து நடைபெறவுள்ள ஊர்வலத்தில் நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் மக்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கறையும் அன்பும் ஏற்பட்டுள்ளன. அந்த அக்கறையும் அன்பும் தேர்தலை நோக்காக கொண்டதேயன்றி உண்மையானதல்ல.

ஜனாதிபதித் தேர்தலை அறிவித்ததும் அரசு அவசர அவசரமாக முகாம்களில் உள்ள மக்களை மீள்குடியமர்த்துகிறது. அம்மக்களை சுதந்திரமாக நடமாடுவதற்கான வாய்ப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது எனவும் கூறுகிறது.

இடைத்தங்கல் முகாம்களுக்குள் புலி உறுப்பினர்கள் இருக்கின்றனர் எனவும், வன்னிப் பகுதியில் பெருந்தொகையான மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதால் முகாம்களில் உள்ள மக்களை மீள்குடியமர்த்த முடியாது எனவும், அப்பகுதியில் முழுமையாக மிதிவெடிகளை அகற்றி பாதுகாப்பை உறுதிப்படுத்தியதன் பின்னரே அம்மக்களை அவர்களுடைய சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துவோம் எனவும் அரசு முன்னர் கூறியது.

ஆனால், தற்பொழுது அம்மக்கள் சுதந்திரமாக நடமாட அனுமதி வழங்கப்படுகிறது எனவும் ஜனவரி மாதத்திற்குள் அனைத்து முகாம் மக்களும் அவர்களுடைய சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படுவர் எனவும் அரசு கூறியிருப்பது அதன் அரசியல் சுய இலாபத்தை தெட்டத் தெளிவாக காட்டுகிறது.

அதேபோன்று ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கும் தமிழ் மக்கள் மீது திடீர் கரிசனை ஏற்பட்டுள்ளது. முகாம்களில் உள்ள மக்கள் பெரும் அவதியுறுகின்றனர் எனவும் அவர்கள் தொடர்பில் அரசு உரிய நடவடிக்கை எடுக்காமையானது மிகவும் கவலையளிக்கிறது என அவர் கூறியிருக்கிறார்.

எனவே, இவர்களின் திடீர் கரிசனையின் காரணத்தை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். தென்னிலங்கையில் 1988, 1989 காலப் பகுதிகளில் பெருந்தொகையான இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள்.

அந்தச் சந்தர்ப்பத்தில் கண்ணீர் வடித்து அதற்கெதிராக போராட்டத்தை நடத்திய மஹிந்த ராஜபக்ஷ, இன்று காணாமல் போனோர் தொடர்பிலும் உரிய நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாமல் இருக்கின்றார்.

இவ்வாறு சிங்கள இளைஞர்களுக்கு ஒரு முகம், தமிழ் - இளைஞர் யுவதிகளுக்கு ஒரு முகம் காட்டியவர்கள் தமிழ் மக்கள் மீது திடீர் கரிசனை காட்டுகிறார்கள். ஆனால், நாம் அப்படியல்லர். அன்று சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டபோதும் அதற்கெதிராக போராடினோம். அதேபோன்றுதான் தமிழ் இளைஞர்கள் யுவதிகள் கொல்லப்பட்டதற்கு எதிராகவும் போராடி வருகின்றோம்.

தமிழர்களாயிருந்தாலும் சிங்களவர்களாகவிருந்தாலும் அவர்களுக்கு அநீதி இழைக்கப்படும்போது அதற்கெதிராக நாம் குரல்கொடுத்து போராட்டங்களை நடத்துவோம் - என்றார். (அ-சி)

## 13 ஆவது ....

(முதல ் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வெ ளிக்கிழமை இந்திய ராஜ்யசபையில் வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார். இது குறித்து மேலும் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்பிற்குள் அந்த நாட்டின் சிறுபான்மை சமூகத்தினர் உட்பட அனைத்து பிரிவினரினதும் நியாயபூர்வமான அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய அரசியல் நடைமுறைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது குறித்து இந்தியா ஆர்வமாகவுள்ளது.

இவ்வாறான அரசியல் நடைமுறையும், அனைத்துத்தரப்பினரையும் உள்ளடக்கிய பேச்சுகளும் இலங்கையின் தேசிய அரசியல் நீரோட்டத்திற்குள் சிறுபான்மை சமூகத்தவர்களைக் கொண்டு வருவதற்கு உதவியாக அமையும்.

இலங்கை அரசு, அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு அப்பால் செல்லக்கூடிய அர்த்தப்புஷ்டியுள்ள அதிகாரப்பகிர்வுத் தீர்வுத் திட்டத்தைமுன்வைக்கவேண்டுமென இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது.

நாங்கள் அவர்களுடைய மாற்றம் அடையும் காலம் மற்றும் சீர்திருத்தத்தில் தொடர்ந்தும் இணைந்திருப்போம்.

இலங்கையில் மோதல் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றத்திற்காக அந்த நாட்டு அரசுடன் இணைந்து செயற்படுவோம்.

3 லட்சம் இடம்பெயர்ந்த மக்களுக்கும் உடனடி மனிதாபிமான உதவி வழங்கப்படுவதும், அவர்களை அவர்களது சொந்த இடங்களிலேயே மீளக் குடியமர்த்துவதும் முக்கியமானது.

இந்த விடயம் தொடர்பாக இந்தியா தனது கவலையை தெரிவித்த பின்னர் ஜனவரி மாதத்திற்குள் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் மீளக் குடியமர்த்துவதாக இலங்கை உறுதியளித்துள்ளது - என்றார். (அ-சி)


N.C.A கல்வி நிலையம்
கே.கே.எஸ். ரோட், இணுவில்
கல்வியாண்டு 2010
தரம் 4 முதல் O/L வரை
ஆரம்பம்: 05.12.2009 சனி(இன்று) பி.ப 5.00

யாழில் கொழும்பு பிறிண்டேர்ஸ்
666, கே.கே.எஸ். வீதி (யாழ் இந்துக் கல்லூரி அருகாமை) யாழ்.
உயர் தொழில்நுட்பத்திலான நவீன முறை
அச்சுப்பதிப்பகம்.
சகல விதமான அச்சுப்பதிப்புக்களையும்
நவீனமுறையில் ஓவ்செற் பிறிண்டிங்
செய்து கொள்ளலாம்

அதிரடி விலைக்கழிவு
எமது ஸ்ரூடியோவில் படம் பிடித்திட
* அடையாள அட்டைப்படம் -80/-
* (4x6) அளவிலான படங்கள் -30/-
* பிரதியாக்கம் (ஸ்ரூடியோ மட்டும்) - 09/-
* பனர், ஸ்டிக்கர் -70/-
(சி/562927)
மூர்த்தி டிஜிட்டல் கலர்லாப்,
யாழ்ப்பாணம்.

மாணவச் செல்வங்களே பொறுத்திருங்கள்
மார்கழி 10 மட்டும் (சுபநேரம், 8.30 காலை)
34 வது வருட சேவை நிறைவில்
முதல் தர நிறுவனம்
கல்வியாண்டு 2010
தரம் 6,7,8,9,10, O/L (Evening Batch)
5-12-2009 இலிருந்து அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
(562929)
விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

தேவை
யாழ் .மாநகரசபை எல்லைக்குள்
சேவிஸ் ஸ்ரேசன் அமைப்பதற்கு
இடம்தேவை
தொடர்பு :0773790458

டிஜிற்றல் பிறிண்டிங்
பனர்கள், ஸ்ரிக்கர்கள், கொழும்பு
விலையில் உடனுக்குடன் பிறிண்டிங்
செய்து பெற்றுக்கொள்ளலாம்.
கொனிக்கா & சிறிடிஜிற்றல் கலர் லாப்
14, சிறி வெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 2223493 (562942)

LAVA HOSPITAL
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வு
கூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்
★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=
(இ/562626)

புதிய வகுப்புக்கள் ஆரம்பம் கல்வியாண்டு - 2010
தரம் 4 முதல் O/L வரையான வகுப்புக்கள் அனுபவம்
நிறைந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது
சகல வகுப்புக்களும் 05.12.2009 சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு ஆரம்பமாக உள்ளன.
சிறந்த பெறுபேற்றை பெற்றுக்கொள்ள......
விக்கினேஸ்வரா கல்வி நிலையம்
பொற்பதி, கொக்குவில் (92302)

SM CONSULTANT SERVICE
148, Temple Road, Jaffna.( யுனிசெவ் முன்பாக)
யாழ். மாணவர்களிற்கு லண்டனில் விசா
பெற்றுக் கொடுப்பதில் மக்களின் நன்மதிப்பை
பெற்று முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம்!!!
* ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான பிரவேசத்திற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.
* விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாகத் தொடர்புகொண்டு,தேவையான விவரங்களைச் சமர்ப்பித்து தற்போது அமுலில் உள்ள இலகுவான நடைமுறையின் கீழ் விசாக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்!!!
* சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்!!!
* தினமும் (ஞாயிறு உட்பட) காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்துக் கொள்ளலாம்.
STUDY IN EUROPE - MBBS/ MD
"LAGANSK STATE MEDICAL UNIVERSITY "(UKRAINE -EAST EUROPE) இல் இணைந்து சிறிலங்கா MEDICAL COUNCIL லினால் அங்கீகரிக்கப்பட்ட டாக்டராக நீங்களும் வரவிரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு: 021 222 3818, 0774528818
e.mail: mg1404_2009 @ yahoo.com
இல: 148 கோயில் வீதி
யாழ்ப்பாணம்.
(யுனிசெவ் முன்பாக)

இன்று (5/12)
பிற்பகல் 5 மணி
ஆசிரியர்:
தவசேகர்
(92866)
D.M.I
ஆரியகுளம் சந்தி

ஐடியல் அக்கடமி
சீரணிச்சந்தி சண்டிலிப்பாய் | இடைப்பிட்டி காரைநகர் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | பிரதான வீதி மானிப்பாய்
இன்று புதிய 2010 கல்வியாண்டு ஆரம்பம்
★ எமது நான்கு நிறுவனங்களிலும் ஒரே நேரத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் ஆரம்பமாகின்றது English Medium
* யாழ்.கஸ்தூரியார் வீதியில் உள்ள ஐடியல் அக்கடமியில் தரம் 6இற்கான English Medium வகுப்புகளும் இன்று ஆரம்பமாகின்றன.
"ஒழுக்கத்தின் ஊடான கல்விச்சேவையே! எமது தனித்துவம்.
எம்முடன் இணைந்தவர்களுக்குப் புரியும் அதன் மகத்துவம்"
"மாயைகள் நிறைந்த தத்துவம் சொல்லவில்லை"
உயிர்ப்புள்ள உண்மைகளுடன் உங்களிற்கான கல்விச்சேவையில் நாம்......
கணித ஆசானும் நிர்வாகியும்
V.N. பத்மநாதன்
(562937)


e.com
O/L, A/L மாணவர்களுக்கான ICT, GIT புதிய வகுப்புக்கள்
பிரத்தியேகமாக/குழுக்களாக விரும்பிய நேரத்தில் கற்கும் வசதி
Call : 0217429005
Diploma in Microsoft Office 2007
Diploma in Desk Top Publishing
Diploma in Computer Networking
Diploma in Web Designing
Diploma in Computer Hardware
Diploma in Video Editing
Diploma in .Net Programming
Certificate in Internet & E-Mail
No.95A Temple Road, Nallur, Jaffna. No.95 Thavady South, Kokuvil, Jaffna

Science Centre
(Beacon கல்வி நிலையம்)
(மணிக்கூட்டு வீதி)
* Physics
* A/L 2010
* சட்டமும் கதிர்ப்பும்
ஆரம்பம்-06/12/2009
11.30-12.30 a.m Sun
A/L 2011
அலைகளும் அதிர்வுகளும்
ஆரம்பம்-06/12/2009
2.00-3.00 p.m Sun
ஆசிரியர்- திரு.ம.ஸ்பெல்மன் (B.sc)
(வேறு பாட அலகுகளைக் கற்க விரும்புபவர்களும், நேர மாற்றத்தைச் செய்ய விரும்புபவர்களும் ஆசிரியருடன் தொடர்புகொள்ளவும்.)
(93775)

மாபெரும் மலிவு விற்பனை
50 வருட பூர்த்தியை முன்னிட்டு
20% - 40% வரையான விசேட கழிவு
எங்களிடம் எல்லாவிதமான அப்பியாசக் கொப்பிகள், பாடப்புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், சிறுவர்களுக்கான நாலுறூள், இரட்டை றூள் கொப்பிகள் (160,80 பக்கங்களில்) மற்றும் எழுதுகருவிகள் அனைத்தையும் ஒரே கூரையின்கீழ் தெரிவுசெய்து குறைந்த விலையில் தரமான பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம். தரம் குறைந்த கொப்பிகளைப் பெற்று பிள்ளைகளின் தரத்தைக் குறைக்காதீர்கள்.
2500 ரூபா பெறுமதிக்கு அதிகமாக கொள்வனவு செய்பவர்களுக்கு அழகிய (My Clear Bag - Rexion) இலவசமாக வழங்கப்படும்.
சனி, ஞாயிறு தினங்களில் முழுமையாக எமது நிறுவன வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றும் என்பதனை அறியத்தருகின்றோம்.
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்... வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org